பெருகும் மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில்,நாற் றிசையும் உண்ணும்: அமிர்தென, எழுநா எச்சில்
மெச்சிநா ணாளும் விண்ணோர் மிசைகுவர்: வேத போதன்
'நச்சினார்க் கினியன்' எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்'

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"—தமிழ் மறை

தொகுதி 3. } அக்ஷய-௵ தை-௴ 1927-௵ ஜனவரி-௴ { பகுதி 1.

எங்கள் நாடு.

ஒன்றே உயர்ந்த பிரமம். இரண்டே ஓதும் வினைகள். மூன்றே
துன்றும் குணங்கள் சுடரோடும் உற்ற தொழிலும். மறைகள் நான்கே.
என்றும் பரந்த பூதம் புலன்கள் இயலோடு தெய்வ தருவும்,
மன்றும்ஐந் தே. ஆறேவேத அங்கம். மண்ணோடு ராகம் ஏழே. (1)

நல்லாசை எட்டே. மணியோடு வேதம் நவமே. வளியோர் பத்தே.
மல்லே றுயர்த்த ருத்ரர்எண் பன்னொன் றே.பன்னி ரண்டே ஒளிசேர்
எல்லாகும் என்றும் இதன்மேலும் உள்ள எல்லாமும் சொல்லும் நன்னூல்
வல்லாரும் வல்ல வகையே உரைத்து வாழ்ந்திட்ட தெங்கள் நாடே. (2)

தென்பால், கிழக்கு மேல்பாலில் வாரி சிமயத் துயர்ந்த இமயம்
வன்பால் வடாது நான்கெல்லை ஆக வாய்ந்துள்ள தெங்கள் நாடே.
இன்பாலி யாறு காவேரி வையை எற்றும் தரங்க நீரின்
தன்போ லுயர்ந்துத் தகைமிக்க கங்கை நதியாதி சார்ந்த நாடே. (3)

நந்தாத தெய்வ மொழிசேர் தமிழ்க்கு நாடும் தெலுங்கு துளுவும்
முந்தேறு சந்த மலையாளம் இந்தி முதலான பற்பல் மொழிகள்
வந்தோது செம்மை நிலையும் பரந்த வளமும் மிகுந்த நாடே.
பிந்தாத கன்னி நலமே மிகுந்து பேர்பெற்ற தெங்கள் நாடே. (4)

நா. லெக்ஷ்மி நரசிம்மையர், தமிழ்ப்பண்டிதர், வத்திராயிருப்பு.

மருவி வழங்கும் சில சொற்கள்.

(2-வது புத்தகம் 350-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பெரிய மனுஷியாய்விட்ட, அதாவது, பக்குவமுற்ற ஒரு பெண்ணைக் குறித்துப் பேசும்போது, அவள் 'திரண்டவள்' என்றும், அவளுக்குத் 'திரட்சிக் கல்யாணம்' நடக்கவேண்டுமென்றும் சொல்லக் கேட்டிருப்போம். 'திரண்டவள்' என்பதற்குப் 'பருமனானவள்' என்பதும், 'திரட்சி' என்பதற்குப் 'பருமன்' என்பதுமே பொருள். இவ்விரு மொழிகளுக்கும் பெண்ணைக் குறித்த செய்கைகளுக்கும், யாதொரு சம்பந்தமுமில்லை. ஆயின், 'ஏன் அங்ஙனம் கூறுகிறார்கள்?' என்னில், திருத்தமான மொழிகள் இன்னவென உணராமையால்தான். "திரண்டவள்" என்பது, 'தெருண்டவள்' என்றும், 'திரட்சி' என்பது "தெருட்சி" என்றுமே இருத்தல்வேண்டும். இவ்விருசொற்களும் 'தெருள்' என்பதன் அடியாகப் பிறந்தவை. 'தெருள்' என்பதற்கு, 'அறிவு' 'விவேகம்' என்பன பொருள் ஆதலின், 'தெருண்டாள்' என்பதற்கு 'அறிவுள்ளவளானாள்' என்றும்; 'தெருட்சி'க் கல்யாணம் என்பதற்கு, 'அறிவுபடைத்தவட்கு நடத்தும் விவாகச்சடங்கு' என்றும் பொருள் எனத் தெளிக. தமிழ்மொழி பேசுவோர் 'திரண்டாள்' என்று பிழைபடக்கூறினும், அத்தகைய பெண்ணைக் குறித்துப் 'புத்தி யறிந்தாள்' என்று பார்ப்பனரும் கூறுவது இவ்வுண்மையை விளக்கும்.

ஒருவகை நிலப்பயிரை 'நஞ்சைப்பயிர்' என்றும், மற்றொரு வகை நிலப்பயிரை 'புஞ்சைப்பயிர்' என்றும் சொல்லுகிறார்கள். 'நஞ்சை' என்பது 'விஷத்தை' என்றே பொருள்படும். 'புஞ்சை' என்பதற்கோ பொருள் இல்லை. இவ்விருமொழிகளும் முறையே 'நன்செய்' 'புன்செய்' ஆம். 'செய்' என்பதற்கு 'வயல்' என்பது பொருளாதலின், 'நன்செய்' என்பதற்கு 'நன்மை மிக்க, (அதாவது) உயர்ந்த வயல்' என்றும், 'நன்செய்ப்பயிர்' என்பதற்கு 'அந் நன்னிலத்தில் விளையும் உயர்ந்த தானியமாகிய நெற்பயிர்' என்றும், 'புன்செய்' என்பதற்கு 'அற்ப வயல்' என்றும், 'புன்செய்ப் பயிர்' என்பதற்கு 'அவ்வற்ப வயலில் விளையும் சிறு தானியங்களாகிய உழுந்து துவரை வரகு முதலிய பயிர்கள்' என்றும். பொருள். (இன்னும் வரும்) —பத்திராதிபர்.

சிவமயம்.

காமந்தக நீதிசாரம்.

முதலாவது ஸர்க்கம்.

தனது மகிமையினால் உலகத்தோரை நீதிநெறியில் நிறுத்து கின்றவனும், சதுரங்கபலத்தோடு கூடியவனும், லக்ஷ்மியோடு சேர்ந்தவனும், தேவாம்சம் பொருந்தியவனுமான பூபதி ஜயத்தோடு விளங்குகின்றான்.

முனிவர்களைப் போன்றவர்களும், தானம் வாங்காதவர்களும், நற்குடியிற் பிறந்தவர்களுமான மஹான்களின் குலத்தில் உதித்த வரும், உலகில் பிரசித்தமான அக்கினிபோல் ஒளி பொருந்தியவரும், பிராமணர்களுள் சிறந்தவரும், பேரறிவுள்ளவரும், நான்கு வேதங் களையும் அத்யயனம் செய்தவரும், மின்னலைப்போல் காந்தியுள்ள வரும், தம் ஆலோசனையாகும் வஜ்ராயுதத்தால் சோபையுள்ள நந் தர்களென்னும் மலையை வேரோடு பிடுங்கி யழித்தவரும், பராக்கி மத்தில் சுப்பிரமணியனைப் போன்றவரும், தமது மந்திராலோசனை யின் வன்மையால் தாம் ஒருவராகவே நந்தர்களிடமிருந்து ராஜ்யத் தைப் பிடுங்கிச் சந்திரகுப்தனுக்கு அளித்தவரும், செல்வ நூலென் னும் கடலினின்று நீதிசாஸ்திரமென்னும் அமிருதத்தை யெடுத்த வரும், வித்வானுமாகிய சாணக்கியருக்கு நமஸ்காரஞ்செய்கிறேன்.

தூரதர்சியும், வித்தைகளில் கரைகண்டவருமாகிய சாணக்யர் இயற்றிய நீதிசாஸ்திரத்தினின்று, ராஜநீதியைச் சுருக்கமாகக் கூறுகின்றேன். இந்நூல் சாணக்யரது நூலிலுள்ள விஷயங்களோடு கூடியது. இது மன்னவர்களுக்குப் பூமியைச் சம்பாதிக்கும் விஷ யத்திலும், அதனைப் பரிபாலிக்கும் விஷயத்திலும் சாதனமாயுளது.

பெரியோர்களால் கொண்டாடத்தக்கவனும், சந்திரன் சமுத் திரத்தை மகிழ்விப்பதுபோலப் பிரஜைகளைத் திருப்தி செய்விப்பவ னுமாகிய அரசன் இவ்வுலகத்திற்குக் காரணமாயிருக்கின்றான்.

இவ்வுலகில் அல்வழி நீக்கி நல்வழியிற் செலுத்தும் அரசன் இல்லாவிடில், கடலில் மாலுமியின்றித் தவிக்கும் கப்பலைப்போலக் குடிகள் யாவரும் கெடுவார்கள்.

பிரஜைகள் தர்மிஷ்டனையும், செங்கோல் செலுத்துகின்றவனையும், சத்துரு தேசங்களைப் பிடிக்கின்றவனையுமுள்ள பார்த்திபனைப் பிரமன் எனக் கொண்டாடுகின்றனர். அரசன் குடிகளைக் காப்பாற்றுகின்றான். இவ்வாறு காப்பாற்றப்பட்ட குடிகள் கொற்றவனைக் காக்கின்றன. அரசனைக் குடிகள் வளர்ப்பதினும் குடிகளை அரசன் காப்பது சிறந்தது. அக் காப்பு இன்றேல் யாவும் வினையாம்.

செங்கோல் செலுத்தும் மன்னன், தன்னையும் பிரஜைகளையும் அறம் பொருள் இன்பம் இவற்றை அடையச் செய்கின்றான். அரசன் நீதிநெறியினின்று விலகிவிட்டால், அவன் தன்னையும் குடிகளையும் கெடுத்து விடுகின்றான்.:–யவனன் என்ற அரசன் தர்மத்தைக் கைக்கொண்டதால் பூமியை வெகுகாலம் பரிபாலித்தான். நகுஷன் என்ற அரசன், அதர்மத்தை மேற்கொண்டமையால் பாதாளத்தை அடைந்தான். ஆதலால் அரசன் நீதியை முன்னிட்டுப் பொருளைப் பெறுவதற்கு முயலவேண்டும். தர்மத்தினால் இராஜ்யம் விருத்தியடைகின்றது. ராஜ்யத்திற்குச் செல்வமே பயனும். மன்னவன் மந்திரி, தேசம், அரண், கோசம், சேனை, மித்திரர் அடங்கியதே ராஜ்யம். அந்த ராஜ்யத்தின் பலத்திற்குக் காரணர் சாமர்த்தியரும் புத்திமான்களேயாவர்.

அரசன் தன் சாமர்த்தியத்தை ஆதாரமாகக் கொண்டும், உபாயங்களை யறிந்துகொண்டும், ஏழு அவயவங்களையுடைய ராஜ்யத்தைக் காப்பதற்காக என்றும் ஜாக்கிரதையாயிருந்து முயலவேண்டும்.

நீதி வழுவாது பொருளீட்டல், ஈட்டிய பொருள்களைக் காத்தல், காத்த பொருளை மேன்மேலும் பெருக்கல், பெருக்கிய பொருளைத் தக்காருக்கு அளித்தல், என்று ராஜகாரியம் நால்வகைப்படும்.

மன்னவன், நீதி, பராக்கிரமம், உலையாமுயற்சி இவைகளைக் கொண்டு, பொருள் வருவாயைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். வணக்கமுடைமையே நிதிக்குக் காரணமாம். சாஸ்திர வாராய்ச்சியினாலுண்டாகும் தெளிவே வணக்கமாம்.

இந்திரியங்களை வெல்லுவதும் வினயமாம். இந்திரியங்களை வென்றவன் சாஸ்திரங்களிற் கூறியவாறு நடப்பன். அவ்வாறு நடப்பவனுக்குச் சாஸ்திரங்களின் உட்பொருள்கள் தெளிவாய் விளங்குகின்றன. (இன்னும் வரும்.)

பண்டித: எம். எம். நாராயணசாமி ஐயர், முடிகொண்டான்.

சுவாமி சிரத்தானந்தர்.

வீரத்துறவியும் மெய்த்தவ முனிவருமான சுவாமி சிரத்தானந்தரை அக்ஷய வருஷம் மார்கழிமீ 8உ வியாழனன்று மாலையில் டில்லிநகரில் ஓர் அறிவற்ற முஸ்லிம் சுட்டுக்கொன்ற செய்தி தேச முழுமையும் துயரத்தில் ஆழ்த்திவிட்டது. பாஞ்சால நாடும் பாரத தேசமும் இதனால் கொதிப்படைந்திருக்கிறது. சுவாமி சிரத்தானந்தர் சில மாதகாலமாக நோயுற்று வருந்தியிருந்து சில தினங்களாகக் குணமடைந்து வந்தார். 8-உ வியாழனன்று மாலையில் டில்லியில் அவர் தமது இருப்பிடத்தில் படுக்கையில் இருந்தபொழுது, அப்துல் ரஷீத் என்ற ஒரு முஸ்லீம் சுவாமிகளிடம் சமயசம்பந்தமான சந்தேகம் கேட்கவேண்டுமென்று அவரைப் பார்க்கவிரும்பினான். சுவாமிகளின் வேலையாளான தர்மசிங், சுவாமிகள் சுகவீனமாயிருப்பதால் பார்க்கமுடியாதென்று மறுத்தும், அவர்கள் பேச்சைக்கேட்ட சுவாமிகள், அவனை உள்ளே விடுமாறு கட்டளையிட்டார். உள்ளே சென்ற ரஷீத், தனக்கு சில சந்தேகங்கள் இருப்பதாகச் சொல்ல, சுவாமிகள் தமது உடல் நிலை சீர்ப்பட்டவுடன் வந்தால் தெளிவுபடுத்துவதாகச் சொன்னார். இதற்கிடையில், ரஷீது, தாகத்துக்கு நீர்வேண்டுமென்று கேட்க, வேலையாள் நீர் அளித்தான். நீர் அருந்திய சோரன், வேலையாள் அப்பாத்திரத்தை உள்ளேகொண்டுபோய்வைக்கச் சென்ற சமயம் பார்த்து, திடீரென்று, படுக்கையில் இருந்த சுவாமிகள் மார்பை நோக்கி நாலு குண்டுகள் சுட்டுவிட்டான். ஓடிவந்து அவனைத் தடுக்க முயன்ற தருமசிங்குமீதும் சுட்டான். சுகவீனமாயிருந்த சுவாமிகள் குண்டுகள்பட்டவுடனே உயிர்துறந்தார்.

நெடிய உருவத்தைப்போலவே அரிய குணங்களையும் கொண்டு தேசத்திற்கும் தெய்வத்துக்குமே தமது வாழ்நாளெல்லாம் மௌனமாக உழைத்துவந்த சிரத்தானந்த முனிவரின் வாழ்க்கை இவ்வாறு முடிவடைந்ததுபற்றி எந்த இந்துவின் உள்ளந்தான் துயரமடையாது? உண்மையான முஸ்லீம்களும் இதற்காக வருந்தவே செய்கிறார்கள். ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோற்றுப்பதம் போதும் ஆதலின், மௌலானா மகமதலி காங்கிரஸ் விஷயாலோசனைச்சபையில் நடவடிக்கைகள் தொடங்குமுன், ஸ்வாமிகளின் கொடுங்கொலையைப் பற்றிக் கூறியதைமட்டும் இங்குப் பெயர்த்து எழுதுகிறோம்:

அது யாதெனில், "நண்பர்களே! நான் அளவுகடந்த துக்கத்துடன் இன்று பேச எழுந்திருக்கின்றேன். மகாத்மாஜி அமர்ந்திருந்த வண்டிக்கு அடுத்த வண்டியில் நானும் எனது சகோதரரும் உட்கார்ந்துகொண்டிருந்தோம். அப்போது மகாத்மா கொடுத்தனுப்பிய தந்தியைப் பார்த்து திடுக்கிட்டுப்போனேன். உடனே சுவாமிஜியின் குமாரரான, ஆசிரியர் இந்திராவுக்கு நானும் எனது சகோதரரும் சேர்ந்து துக்க சமயத்தில் நாங்கள் ஆழ்ந்த அனுதாபங் காட்டுவதாக ஒரு செய்தி அனுப்பினோம். நியாய புத்தியுள்ள முஸ்லீம்களின் சார்பாக நான் இச்செய்கை மிகக் கொடிய செய்கை என்றே கண்டிக்கின்றேன். அந்தக் கொலைகாரப் பாவி தனது மதத்துக்கும் தன் வகுப்பாருக்கும் பழியைத் தேடிவிட்டான். இதைவிடக் கொடிய காரியம் வேறில்லை. வயோதிகர், நோய்வாய்ப்பட்டுப் பாயும் படுக்கையுமாகவிருக்கையில், அவரிடம் மதத்தின் பேரைச்சொல்லிக்கொண்டு சென்ற ஒருவன், ஜலம் வேண்டி, வேலைக்காரனை வெளியே அனுப்பிவிட்டு, சமயம் பார்த்து அவ்வயோதிகரைக் கொலை செய்தது, சுத்த அயோக்கியத்தனமான காரியம். இத்தகைய காரியத்திற்கு ஒருகாரணமும் சமாதானமும் வேண்டுமா? நாம் ஒன்றுபட்டு நமது பொதுவான விரோதியை எதிர்த்துப் போராடும்படி ஆண்டவன் பெயரால் உங்கள் யாவரையும் வேண்டிக்கொள்ளுகிறேன். இக்கொடிய செய்கையால் அந்தப் போராட்டத்திற்கு ஏதேனும் தடை ஏற்படுவதாகவிருந்தால் இக் காங்கிரஸை நானே விட்டு விலகி விடுகிறேன்.

"கொலையாளி கோர்ட்டுமுன்னால் கொண்டுவரப்பட்டு அவன்மீது குற்றம் ருஜுவாகிவிட்டால், அவன் தூக்கப்பட்டுவிடுவான். மகாத்மாஜி சொன்னதுபோல அவ்வளவோடு இச் சச்சரவு முடிந்துவிடும் என நினைப்பதற்கில்லை. அக்கொலையாளி என்ன நோக்கத்துடன் சுவாமிஜியைச் சுட்டானோ அது ஒருபுறமிருக்கட்டும். நான் எனது ரத்தத்தைச் சொரிவதால் இந்தப் பாவத்துக்குப் பரிகாரமேற்படுமாயின், அந்த மனிதன் செய்த பாவத்துக்காக நான் எனது உயிரைச் சற்றும் தியங்காமல் பலிகொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். வேண்டுமானால், என்னை யாராவது சுட்டுக்கொன்று விடட்டும். என் நாட்டின் சுதந்தர லக்ஷியத்துக்காக உயிர்விடுவது எனக்குப் பெருமையே. நான் தற்போது சொல்லவேண்டியதெல்லாம் அவ்வளவே. இரண்டு சமூகங்களையும் ஒன்றுபடுத்த என்னால் கூடியதை நான் செய்வேன். ஆண்டவன் அருள்பாலிக்கவேண்டும்" என்பதே. நிற்க.

நமது பழமையான கல்வி முறையைக் குருகுல வாயிலாக மீட்டும் நிறுவிய பெரியார் நமது சுவாமிகள். தேசத்திற்காக அவர் தியாக வாழ்க்கை நடத்தினர். இந்த சமயத்திற்காக அவர் நாளெல்லாம் உழைத்தார். தென்னுட்டிலுள்ள சமயத் தலைவர்களிலே பலர் சோற்றுச்சாமிகளாயும், வேறு பல சாமிகளாயும் இருந்து வரும் காலத்திலே, இந்த வடநாட்டுச் சாமிகள், சென்ற முப்பது ஆண்டுகளாகக் கல்விக்காகவும் சமயத்திற்காகவும் தேசத்திற்காகவும், அரியவேலைகள்செய்து வந்தார். இவரது சமயப் பிரசாரத்தின் பயனுக, ஆதியில் ஹிந்துக்களாயிருந்து இடையில் முஸ்லிம்களாகி வருந்திக்கொண்டிருந்த பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் திரும்பவும் ஹிந்துக்களானுர்கள். இது பற்றி முஸ்லிம்களில் ஒரு பகுதியாருக்கு ஏற்பட்டிருந்த கோபமே அவரது கொலைக்கும் காரணமாயிற்று. இந்தக் கொலைக்குக் காரணம் ஒரு தனி மனிதன் அல்ல வென்றும் லாலா லஜபதிராய், பண்டிதர் மாளவியா முதலிய வடநாட்டு இந்து சமூகத்தலைவர்கள் சிலரைக் கொலைசெய்யும் நோக்கத்துடன் தோன்றியுள்ள ஒரு குழுவின் வேலையே யென்றும் தெரிகிறது.

சாதுக்கள் தேசத் தொண்டிலே ஈடுபட்டால் எவ்வளவு அதிசயமான வேலைகள் செய்யலாமென்பதை சுவாமிகள் மகாத்மாகாந்தியின் சத்யாக்கிரக இயக்கத்தில் ஈடுபட்டிருந்த பொழுது செய்த அதிசய வேலைகளால் விளக்கினர். டில்லியில் சத்தியாக்கிரகத் திருநாளன்று கூடியிருந்த பெருஞ் சனத்திரள் மீது கூர்க்கப் போர் வீரர்கள் துப்பாக்கியால் சுட முயன்றபொழுது, சுவாமிகள், ஜனங்களைச் சுட வேண்டாமென்று கூறித் தம்மை முதலில் சுடுமாறு அஞ்சாது நெஞ்சு காட்டிய துணிவை யார்தான் மறக்கமுடியும்! அந்த வீரத் துறவியை அவர் சுகவீனமாகப் படுக்கையிலிருந்தபொழுது ஒரு மூட முஸ்லிம் கோழைத்தனமாகக் கொன்று பெரும் பழி தேடிக்கொண்டான்! ஆயினும், அவனது செயலின் பின்விளைவை அவன் அறியக்கூடிய வனுயிருப்பின் அவன் அந்தக காரியத்தைச் செய்திருக்கவே மாட்டான். திருவருளின் செயல் அவ்வாருயிற்று!

நாட்டிலே நாயகமாக விளங்கிய ஒரு பெரியாரை நாம் இழந்து விட்டோம். ஒரு கர்ம வீரர் நமது காட்சிக்கெட்டாத உலகத்திற்குச் சென்றுவிட்டார். ஒரு வீரத் துறவி விண்ணுலகத்திற்குப் போய்விட்டார். ஆயினும் சுவாமி சிரத்தானந்தர் நம்மை இந்த

நிலையிலே விட்டு மோட்ச மடையப் போவதில்லை. அவரது பூத வுடலைத் தீக்கிரை யாக்கி, அவரது பொன்னான எலும்புகளை யமுனை யாற்றில் கரைத்து விட்டதால், அவர் செத்துவிட வில்லை. அவரது இயக்கமும் முடிந்துவிட வில்லை. அவர் இறுதியாகச் சொன்னது போல இந்த நாட்டிலே திரும்பவும் பிறந்து தாய் நாட்டிற்காகவும் சமயத்திற்காகவும், அவர் தொண்டு செய்யவே போகிறார்.

ஆயினும், சுவாமி சிரத்தானந்தர் இப்பொழுது செத்துவிட்டா ரென்று துக்கப்படுவதிலும் துயரப்படுவதிலும் பயனில்லை. அவரைக் கொன்றவன் மீதும் அவனுக்குத் துணையாயிருந்த கூட்டத்தின் மீதும் கோபிப்பதிலும் பயனில்லை. தெய்விக மதமான இந்துமதம் புத்துயிர் பெறுமாறு நாம் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யுமாறு சுவாமிகளின் மரணம் நமக்குக் கடமை யுணர்ச்சியை உண்டு பண்ண வேண்டும்.

எழுபத்தோரு வயதிலே இருபத்தோரு வயதுள்ள இளைஞன் போல் வேலை செய்த சிரத்தானந்த சுவாமிகளை நாம் இனி அதே கோலத்தில் காண முடியாது. அவரை இழந்துவிட்ட துக்கம் அவர் செய்த முயற்சிகளிலே நாமும் கருத்து வைத்து உழைக்க வேண்டுமென்ற உறுதியையும் ஊக்கத்தையும் அளிக்கவேண்டும்.

வையப் பொது மதமும், தாய் மதமும், தலை மதமும், சநாதன தர்மமுமான இந்துமதம், இன்று ஆதரிப்பாரின்றி யிருக்கிறது. அதற்குப் புத்துயிர் அளிக்குமாறு இந்த நாட்டு இந்துக்களுக்கு—முக்கியமாக இளைஞர்களுக்கு—பெரியவோர் கடமை யுணர்ச்சியை உண்டுபண்ணுமாறு தெய்வத் திருவருளால் விளைந்த பெரு நிகழ்ச்சியென்றே சுவாமி சித்தானந்தரின் தியாகத்தை நாம் கருதவேண்டும். தேசத்திலுள்ள சமயத்தலைவர்களும் சமயாபிமானிகளும் சமயச் சங்கங்களும்இனியேனும்தங்கள் கடமையைச்செய்வதில்ஊக்கம்கொள்ள வேண்டும். சிரத்தானந்தர் நீடுவாழ்க! —"லோகோபகாரி" சென்னை.

விமலாதேவி "புண்ணிய பூமியாகிய இப் பரதகண்டம், முற்காலத்தே தன தான்யாதி சம்பத்துக்களுக்கு நிலைக்களமாயிருந்தது போலவே, கற்பிலும் வீரத்திலும் தியாகத்திலும் தேசாபிமானத்திலும் அரசியலுணர்ச்சியிலும் சிறந்த ஸ்திரீ ரத்நங்களுடையதாய், அருமையும் பெருமையுமிக்க செயல்களுக்கு நிலைக்களமாயிருந்தது" என்பதை இனிது விளக்குவது, இச் சரித்திர சம்பந்தமான தமிழ் நாவல். இதுசாணக்கிய சாகஸத்திலும் இனிமையிற்குறைாததது. ரு. 1—4—0.
பண்டித மு. கோபாலகிருஷ்ணையர், தெப்பக்குளம் P. O., திருச்சி.

மாண்டவன் மீண்டமாயம்.

இருபத்தோராவது அத்தியாயம்.

சம்புப் பரதேசி.

Paradesi Sambu.

கமுகு, மா, தென்னை, பலா முதலிய விருக்ஷஜாதிகளும், மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, சண்பகம் முதலிய மலர்ச்செடிகளும் நிறைந்த தோட்டம் ஒன்றுண்டு. உள்ளே வசிப்பவர்கள், வெளியே செல்வோர் கண்களுக்குப் புலப்படாவண்ணம், தலை மட்டத்திற்கு மேல் உயரமான அடர்ந்தவேலி அதன் நாற்புறமும், சூழ்ந்திருந்தது. அத்தோட்டத்தின் நடுவில் ஓர் பெரிய ஆலமரத்தருகில் ஓர் சிறிய மடம் இருந்தது. கைலாசத்தோடு சம்பாஷித்துப் பிரிந்த பிறகு, சங்கரி இம்மடம் நோக்கிச்சென்றாள். அவள்முகம், அந்திப்பொழுதிற் காணப்படும் தாமரை மலர்போல் வாட்டமுற்றிருந்தது. அவள் மனதில் உத்ஸாகமே காணப்படவில்லை. அம்மரத்திலுள்ள ஆலமரத்தடியிற் போடப்பட்டிருந்த ஓர் சலவைக்கல்லின்மேல், சம்புவும், சிதம்பரமும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

சங்கரி, "என்ன ஆச்சரியம்! சேந்தியில் கிடந்த பழைய பத்திரிகைகளைப் படித்ததால் என்ன குற்றம்? அதைச் சபாபதிக்குச் சொன்னதில் என்ன குற்றம்? இது என்ன அதிசயம்! இது ஏதோ அநர்த்தமாக அல்லவோ நேர்ந்துவிட்டது!" என்று பலவாறாகச் சிந்தித்துக்கொண்டே தோட்டத்துள் நுழைந்தாள். நுழைந்த அவசரத்தில், மூன்றாவது மனுஷன் பக்கத்தில் இருப்பதைக் கவனியாது அவள் பரபரப்புடன் தன் தகப்பனார் பக்கத்தில் போய் நின்றாள்.

சம்பு:—"சங்கரி! இந்த மாமாவைத் தெரியுமா? இவர்தான் சிதம்பரம்"

சங்:—(ஆச்சரியத்துடன்) "சிதம்பரமா? சிதம்பரமா?"

சிதம்:—(வியப்பும் ஐயமும் தோன்ற) "சங்கரி! என்ன, ஆச்சரியப்படுகிறாய்?"

சங்:—"ஒன்றுமில்லை.—கைலாசம்—"

சம்பு:—(பரபரப்புடன்) "கைலாசமா?"

சங்:—(மனக்கலக்கி) "ஆமாம்! அப்பா, கைலாசம்—"

சப்பு:—“கைலாசம்!

சங்:–“ஆம் அந்த பிள்ளையார் கோவில் தோட்டத்தண்டை—”

சம்பு:—“ஏதாவது கேட்டானா உன்னை?”

சங்:—“ஆமாம்!”

சம்பு:—(தலையில் அடித்துக்கொண்டு) “என்ன கேட்டான்? என்ன நீ பதில் சொன்னாய்? ஐயையோ!”

சங்:—“மங்களபுரம் கொலைக் கேஸைப்பற்றி—”

சிதம்பரம் ஒன்றும் சொல்ல நா எழாமல் சித்திரப்பதுமை போல் திகைத்து நின்றார் ‘வல்லவனின் வல்லவன் வையகத்தில்’ உண்டு. என்னைப்பார்க்கிலும் மேலே போய்விட்டானே இந்தக் கைலாசம்! நான் கூடியசிக்கிரம் வந்து எவ்வளவோ ரகஸ்யமாய் இந்தச் சங்கதி ஒன்றும் வெளிவிடாமல் தடுக்கவேண்டும் என்று நினைத்தேனே! காரியம் மிஞ்சிப்போயிற்றே! இனி என்ன செய்வது? —என்ன நடந்தது என்றாவது கேட்போம். ஏது!—கைலாசம் சாதாரண ஆசாமி அல்ல போலிருக்கிறது’. என்று இவ்வாறு சிந்தித்து விட்டு, மறுபடி மனதைத் திடப்படுத்திக்கொண்டு, “அதனால்என்ன? சங்கரி! என்ன நடந்தது? சொல். கேட்போம்” என்று சிரமப்பட்டு மந்தகாசம் செய்துகொண்டு கேட்டார்.

சங்:—“எதற்காகக் கேட்கிறீர்கள்? அப்படி ஒன்றும் விசேஷம் இல்லையே. அந்தக் கொலைக்கேசைப் பற்றிப் பத்திரிகையில் கண்ட சமாசாரங்களை—”

சிதம்:—“பத்திரிகையில் கண்ட சமாசாரங்களை நீ சபாபதிக்குச் சொன்னதில் ஒரு பாதகமும் இல்லை. ஆனால் நீ சொல்லாமல் இருந்திருந்தால் இன்னும் சிலாக்கியமாய் இருந்திருக்கும்.”

சங்:—(கெஞ்சிய வண்ணமாக) “அப்பா! நான் செய்ததில் ஏதாவது கெடுதல் உண்டா?”

சம்பு:—“அடி பாவிகுட்டி! கொஞ்சக் கெடுதலா? நீ அந்தப் பத்திரிகைகளைப் படித்தாய் என்று அன்றைக்கே பலராமன் சொன்னான். ‘போனால் போகிறது’ என்று சும்மா இருந்துவிட்டேன். அதைப்போய் நீ சபாபதிக்குச் சொல்ல, அவன் நாவல் எழுத,

அந்த சமாசாரம் மதுரை டவுன் முழுமையும், 'டாம், டாம்' அடித்துக் கிடக்கிறதாம். இதோ, சிதம்பரம் சொல்லுகிறார்.''

சங்:—''நான் என்ன பண்ணுவேன்? அப்பா! இப்படி எல்லாம் வரும் என்று நினைத்தேனு?''

சிதம்:—''நீ என்ன பண்ணுவாய்? எல்லாம் காலக் கொடுமை, இந்த சமாசாரம் மறுபடி வெளிப்பட வேண்டாம் என்று உன் தகப்பனர் எண்ணினர். என்ன செய்வது? உன்னைச் சொல்வதில் என்ன பயன்?''

சம்பு:—''ஐயோ! என்ன கஷ்டம் வந்து விட்டது! நான்—

சிதம்:—''சம்பு!''

சம்பு:—(சமாளித்துக்கொண்டு தீனயான குரலுடன்) ''சரி. அம்மா! என்ன நடந்தது? சொல்லேன்.''

சங்கரி நடந்ததெல்லாம் சொல்லி முடித்தாள். மற்ற இருவரும் கவனமாய்க் கேட்ட பிறகு, அவர்கள் முகத்தில் சற்றுச் சமாதானம் வெளிப்பட்டது.

சிதம்:—''அவ்வளவு பாதகமில்லை. பலராமனைக் கண்டு, இவர்கள் ஒரு வேளை கேட்பார்கள். அவன் ஏதாவது உளறுமல் இருக்கச் சொல்லவேண்டும்.''

சம்பு:—''பலராமன் கெட்டிக்காசன். அவனைப்பற்றிப் பயம் இல்லை. சங்கரி! மறுபடி அவர்கள் என்ன கேட்டாலும், இனிமேல் ஒன்றும் சொல்லாதே.''

சங்:—''அவர்களோடு பேசவேண்டாம் என்றாலும் பேசவில்லை. அப்பா''

சம்பு:—''பேசு. அதைப்பற்றிப் பாதகமில்லை. இந்தச் சமாசாரத்தைப் பற்றி மாத்திரம் ஒன்றும் பேசவேண்டாம்''

சங்:—''சரி.—அப்பா! என்னவோ தெரியாமல் செய்து விட்டேன்—தாங்கள் திகில் அடைவதைப் பார்த்தால்—''

சிதம்:—''நடந்ததைப்பற்றிப் பேச்சென்ன? இனிமேலாவது ஜாக்கிரதையாய் இரு. யாராவது என்னவாவது கேட்டால் ஒன்றும் சொல்லாதே.''

சம்பு:—"இதைப்பற்றி நீ ஏதாவது சொல்வதாய் ஏற்பட்டால் அவ்வளவு தான்—எனக்கு விநாச காலந்தான்."

சங்:—"அப்பா! என்ன விநாச காலம்!"

சம்பு:—"ஆமாம்! விநாசம்தான். அவமானம். கடைசியில் பிராணனை விடவேண்டியதுதான் அம்மா.—நீ போ."

சிதம்:—"சங்கரி, நீ போ. உன் தகப்பனருக்கு உடம்பு நேரில்லை. நீ இங்கே இருக்கவேண்டாம். அவர் சொல்லுகிறபடி இனியாயினும் செய்."

சங்கரியின் மனதில் பயமும், ஆச்சரியமும் மாறி மாறி வேலை செய்ய ஆரம்பித்தன. "விநாசம்!—அவமானம்!—மரணம்!—இவ் வார்த்தைகளைக் கேட்க முடியவில்லை! கர்ண கடூரமாய் இருக்கின்றனவே. இவற்றின் அர்த்தமென்ன!" என்று சிந்தித்துக்கொண்டே சங்கரி அப்புறம் அகன்றாள்.

இருபத்திரண்டாவது அத்தியாயம்.

பழகின பரிசாரகன்.
The Old Servant.

நிர்மலமான ஆகாயமானது மேகங்களால் மறைபடுவதுபோல, இதுவரை யாதொரு துக்கத்தையும் அனுபவியாத சங்கரியின் மனம், அன்று பலவகையான துக்க எண்ணங்களால் வருந்த ஆரம்பித்தது. அமைதியான கடல், பெரும்புயலால் கொந்தளிப்பதுபோல, அவள் மனம் கலங்க ஆரம்பித்தது. இனி, தன் வாணாள் எல்லாம் வீணாய்விடுமோ என்ற பயம் அவள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. விசாரணையில் சிதம்பரம் சொன்ன சாக்ஷியமானது, சங்கரிக்கு அவ்வளவாகத் திருப்திப்படவில்லை.

"குற்றம் அவர்மேல் இல்லாவிடினும், அவர் அன்றிரவு 'பத்மவிலாஸம் போகவே இல்லை' என்று சொன்னது எனக்குக் கொஞ்சம் சந்தேகமாகத்தான் தோன்றுகிறது. கொலை நடந்த காலத்தில் நான் பிறக்கக்கூட இல்லை. பத்திரிகை மூலமாய் அறிந்தது தவிர வேறொன்றும் இந்தக் கொலையைப்பற்றி எனக்குத் தெரியாது. அப்படி இருக்க என்னை ஏன் மௌனமாய் இருக்கும்படி சிதம்பரம்

கேட்கவேண்டும்? என் பிதாவின் பெயரைக்கூட அந்தக் கேஸ் நடவடிக்கையில் காணவில்லையே. அப்படி இருக்க என் பிதா ஏன் இவ்வளவு பயப்படவேண்டும்? ஒருவேளை அவருக்கும் இதில் ஏதாவது சம்பந்தம் இருக்கலாமோ! ஒருவேளை தர்மராஜு என் பிதாவுக்கு நெருங்கிய பந்துவாக இருக்கலாமோ? அது இருக்கட்டும்—அந்தப் பழைய பத்திரிகையைப் படித்தால், இந்தப் பலராமனுக் கென்ன இவ்வளவு கோபம்? அவன்தானே டப்பி ஸமாசாரம் சொன்னது? என் தகப்பனாரைக் கேட்காமற்போனாலும் அந்தப் பலராமனையாவது கேட்போம்" என்று சிந்தித்துக்கொண்டே அந்தத் தோட்டம் முழுமையும் அவள் சுற்றி வந்தாள். தன் தகப்பனாரையும் இழந்து தான் தவிக்கும்படியாய் எங்கே நேர்ந்து விடுமோ என்றும் தியங்கினாள். "எதற்காக வெளிபேருமலே தகப்பனார் அடைத்துக்கிடக்கவேண்டும்? காரணம் ஏதாவது இருக்க வேண்டும். அந்தச் சனியன்பிடித்த பத்திரிகையால் அல்லவோ இதெல்லாம் நேர்ந்தது!" என்று தன்னையே நொந்துகொண்டாள், பலராமனும் எதிர்ப்பட்டான்.

சங்:—(பதறியவண்ணமாய்) "பலராமா! ஒரு ஸமாசாரம் உன்னைக் கேட்கவேண்டும்—"

பல:—(திகைத்து) "என்ன, என்னம்மா; ஏதாவது ஆபத்து வந்துவிட்டதா"

சங்—"ஒன்றுமில்லை. அப்பாவோடு ஒருவர் பேசிக்கொண்டு இருக்கிறார்—"

பல:—"கிராம முன்சிபோ?"

சங்:—"இல்லை—. மதுரை வக்கீல் சிதம்பரம்."

பல:—"சிதம்பரமா? சண்டாளப்பயல் மறுபடியும் வந்து விட்டானா, குடியைக்கெடுக்க! என்னபேசிக்கொண்டு இருக்கிறான்?"

சங்:—(பலராமனுக்கு வந்த கோபத்தைக்கண்டு பிரமித்து) "அது எனக்குத்தெரியாது. இரண்டுமணி நேரமாய்ப் பேசிக்கொண்டிருக் கிறார்."

பல:—"ஓஹோஹோ! இதற்குத்தானா என்னை வெளியே போகச் சொன்னது? அந்தத் தோஷிப்பயல் ஏன் வந்தான்? வீட்டுக்கு என்னவோ சனியன் பிடித்துவிட்டது. சரி! அந்தப் பயலை இப்பொழுதே வெருட்டித் துரத்திவிடுகிறேன். ஆனால்—"

சங்:—"ஏன்? அதனால் என்ன? அப்பாவும் அவரும் அதிக சிநேகம்போலிருக்கிறதே நீ செய்வது அப்பாவுக்குப் பிடிக்காதுபோலாம்! ஒரு ஸமாசாரம். ஒருவேளை கொலைக் கேஸ் விஷயமாய்ச் சிதம்பரம் வந்திருப்பாரோ?"

பல:—"ஆ! கொலையாவது கேஸாவது? யார் கண்டார்? இதெல்லாம் உனக்கு என்ன விசாரம்? சிறுகுட்டியா லட்சணமாய் இராமல்—"

சங்:—"எனக்கு விசாரமாகத்தான் இருக்கிறது. நீ என்னிடமிருந்து பிடுங்கிச் சென்றாயே, அந்தப் பத்திரிகையில் கண்ட விஷயத்தைப்பற்றி வெளியே சொல்லாமல் இருக்கும்படி எனக்குச் அறிவிக்கும்பொருட்டு அவர் வந்திருக்கிறார்."

பல:—"ஆ! அதென்ன? அது அவருக்கு எப்படித்தெரியும்?"

சங்:—"ச்ஸ்! மதுரை டவுன் முழுமையும் இதுதானே பேச்சாய்க் கிடக்கிறதாம்."

பல.—"சரி! சரி! அசட்டுத்தனமாய் ஒன்றும் சொல்லாதே."

சங்:—"அந்தப் பத்திரிகையைப் படித்து விஷயத்தை ஸபாபதிக்குச் சொன்னேன். அவர் ஒரு புஸ்தகம் எழுதினார்—"

பல:—"ஸபாபதி புஸ்தகம் எழுதினானா? ஐயையோ! குடியைக் கெடுத்துவிட்டாயே! எழுதினது உண்மையான பெயர்களை வைத்தா?"

சங்:—"இல்லை. பெயர், இடம் எல்லாம் மாற்றித்தான்—"

பல:—"எஜமானனுக்குத் தெரியுமா இந்த ஸமாசாரம்?"

சங்:—"இப்பொழுதுதான் தெரியும்போலிருக்கிறது. சிதம்பரம் மதுரையில் அந்தப் புஸ்தகத்தைப் பார்த்த பிறகுதான் இவ்விடம் வந்து தகப்பனாரிடம் சொல்லியிருக்கிறார்."

சங்:—(அலட்சியம் அபிநயித்து) "இன்னொரு சமாசாரம்! ஒருவன் இறந்துபோன சோமுவின் குமாரனும்—ராமஸ்வாமியாம்—இதை விசாரிக்கக் கட்டுசாதம் கட்டிக்கொண்டு வேலைமெனக்கிட்டு இங்கே வந்திருக்கிறானாம்."

சற்றுநேரம் பலராமன் மௌனமாய் இருந்தான். அவனுக்கு அடங்காக்கோபம் வந்துவிட்டது. "போச்சு, போச்சு. விநாசகாலம்

வந்துவிட்டது. எஜமானனுக்கு அனர்த்தம் பிடித்துவிட்டது. ஐயோ! ஐயையோ!!" என்று வாய்விட்டுக் கதறினன்.

சங்கரிக்குத் திகில் உண்டாய்விட்டது. பலராமன் மறுபடி ஸமாதானப்படுத்திக்கொண்டு "சங்கரி, இனிமேல் இதைப்பற்றி ஒருவரிடமும் பிரஸ்தாபிக்கவேண்டாம். உன் தகப்பனரும், சிதம்பரமும் 'நீ ஒன்றும் வெளியிடக்கூடாது' என்று சொல்லுவது வாஸ்தவம்தான்" என்றுன்.

சங்:—"அஃதிருக்கட்டும். சிதம்பரம் என் தகப்பனருக்கு என்ன வேண்டும்?"

பல:—"சிதம்பரம் உயிர்த்தோழன். உயிர்த்தோழனும் அவன்தான், உன் தகப்பனர் குடியைக்கெடுத்தவனும் அவன் தான்" என்று சொல்லிவிட்டு அப்புறம் மறைந்தான்.

சங்கரி என்ன செய்வாள்? பாவம்! தன்மனதில் செப்பும் வேதனையை, உற்றவர் யாரிடமாவது தெரிவித்து, அவர்கள் சொல்லும் தைரியத்தைக் கொண்டாவது ஆற்றிக்கொள்ளலாம் என்று நினைத்தாள். தகப்பனரோ இன்னும் சிதம்பரத்தை விட்டுப் பிரிகிறவழியில்லை. பலராமனே ஒரே தடித்தனமாய் இருக்கிறுன்; ஸாவகாசமாய்ப் பேசிக் குழந்தை சங்கரியின் மனதிலுள்ள வருத்தத்தை நீக்குவதற்குப் போதுமான அவ்வளவு நாகரிகமற்றவன். ஒன்றும் செய்யத் தோன்றுமல் யந்திரத்தில் அகப்பட்ட பாவை போல் தோட்டத்தை விட்டு வெளியேறி அங்கும் இங்கும் சுற்றி வந்தாள்.

அங்கே கைலாசமும், ராமஸ்வாமியும் எதிர்ப்பட்டார்கள். அவள் அவர்களைப் பாராததுபோல் போய்விடலாம் என்று நினைத்தாள். ஆனல் கொலையுண்டு இறந்தவரின் மகன் ராமஸ்வாமியைப் பார்த்ததும், இதற்குமுன் நடந்தவைகளும், இனி ஒருவேளை ஏற்படக்கூடிய அனர்த்தங்களும் ஞாபகத்திற்கு வரவே, அப்படியே முன்பின் அசையாமல் பிரமித்து நின்றுவிட்டாள்.

கைலா:—"ராமஸ்வாமி! இவள் தான் சங்கரி."

ராம:—"என்ன, அம்மா! சௌக்கியந்தானு? 'ஏதோ மரியாதைத் தப்பாய் வந்து பேசுகிறுனே' என்று எண்ணுதே"

சங்கரி மனது சற்றுத் தைரியம் அடைந்தது. கைலாசம் முகத்தைப் பார்த்தாள். அவ்வளவாக அவன் முகத்தில் கெடுதல் குறி காணப்படவில்லே.

சங்:—"ராமஸ்வாமி! இங்கே எது,—இப்படி ஸாவகாச மாய்?—இந்த ஊருக்கு?"

ராம:—"கொஞ்சம் ஸாவகாசம்தான்"

கைலா:—"இவன் இந்தப்பக்கமெல்லாம் பார்க்கவேண்டு மென்ருன். அழைத்து வந்தேன்."

சங்:—"சரி! கொஞ்சம் அவசரம். மன்னிக்கவேணும். நான் போய் வருகிறேன்" என்று விடைபெற்றுச் சென்ருள்.

ராம:—"எது இவள் இவ்வளவு பராமுகமாய் இருக்கிருள். எதாவது விசேஷம் உண்டா? என்ன நடந்திருக்கலாம்!"

கைலா:—"ஒன்றுமிராது! சிதம்பரம் வந்து சங்கரியைப் பார்த்திருக்கிருர். இன்னும் அவர் மடத்தில்தான் இருக்கிருர் போலிருக்கிறது."

ராம:—"நாம் எவ்வளவு சீக்கிரம் வந்திருக்கிறேம்! அதற்கு முன் அவர் எவ்விதம் வந்திருக்கக்கூடும்? என்ன ஆச்சரியம்! சரி! அவரைப் பார்க்கவேண்டுமா?"

கைலா:—(யோசித்துவிட்டு), "இல்லே! இல்லே! அவரை என்ன பார்வை? ஆனல், அவர் என்ன செய்கிருர் என்பதை மாத்திரம் சற்றுக் கவனிப்போம்."

இருபத்து மூன்றாவது அத்தியாயம்.

பூர்வ ஞாபகம்.

The Reminiscence of the Past.

சிதம்பரம், தம் நண்பனோடு வெகுநேரம் பேசிக்கொண்டு இருந்தார். இரவு 8-மணியாய் விட்டது. விடைபெற்றுக்கொண்டு அரைமைல் தூரத்திலுள்ள சமயநல்லூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு அவசரமாய்ப் போகலானார். இன்னும் அரை மணி நேரத்தில் மதுரைக்குப் போகும் 'ஷட்டில்' வந்துவிடும். அது தவறினால் மறுநாள் காலைவரை மங்களபுரத்திலேயே தங்கவேண்டியிருக்கும். இந் நிலைமையில் அவர் வெகு வேகமாகப் பாலத்தின் மீது போய்க் கொண்டிருக்கையில் திடீரென்று அவர் கையானது எட்டிப் பிடிக்கப்பட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார். கையைப் பிடித்தவன் பலராமன் என்று அறிந்தார். ஒரு வேலைக்காரன், மரியாதைத் தப்பாயும், இவ்வளவு தைரியமாயும் தன்னைப் பிடிப்பதற்கு என்ன காரணமோ என்று அச்சமும், ஆச்சரியமும் அடைந்தார்.

பல:—"(வழி மறித்துக்கொண்டு பரிகாசமாய்), வந்தீரா? என் கண் கூட உறுத்திற்று உம்மைப் பார்க்கவேண்டுமென்று. இப்பொழுதுதான் சங்கரி சொன்னாள். ஓட்டம் ஓட்டமாய்க் குடல் தெறிக்க ஓடிவந்தேன். கூட வரட்டுமா ஸ்டேஷனுக்கு?"

சிதம்:—"வாயேன். நிரம்ப சந்தோஷம்!"

இருவரும் பாலத்தின் நடுவில்வந்து சேர்ந்ததும், பலராமன் சிதம்பரத்தை வழி மறித்து, அவர் கைகளைப் பிடித்தான். சிதம்பரம் திடுக்கிட்டுப் பார்த்தார். ஆனால் தைரியம் கொண்டு, தன் பயத்தை மறைத்துக்கொண்டு பலராமன் முகத்தைப் பார்த்தார்.

பல:— "(கோபக்குறியுடன்), எனக்கென்ன இப்பொழுது தோன்றுகிறது தெரியுமா?"

சிதம்:—"(தன் பயத்தை வெளியிடாமல், அலக்ஷியம் அபிநயித்து) ஏன்? ஏதாவது விசேஷமுண்டோ?"

பல:—"விசேஷமா?—'உம்மை இப்படியே கட்டி, இந்த ஓடு கிற வெள்ளத்தில் உருட்டி விடலாமா?' என்று யோசிக்கிறேன். விட்டால், நீர்பண்ணுகிற அக்கிரமம் உம்மோடு தொலைந்துவிடும்."

சிதம்:—"(மெதுவாய்), செய்யலாம். ஆனால் அதனால் என்ன பயன்? நான் இல்லாவிட்டால், உன் எஜமானன் கதி நிர்க்கதி தானே? இதை யோசித்தாயா?"

பலராமன் இவ்வார்த்தைகளைக் கேட்டதும், தன் எஜமானன் மேலுள்ள வாஞ்சையால் தான் செய்த காரியம் சரியல்ல என்று உணர்ந்து, "சீ! சும்மா விளையாட்டாச் சொன்னேன்." என்று சிரித்தான்.

சிதம்:— "(சமாளித்துக்கொண்டு புன்னகையுடன்) எனக்குத் தெரியாதா? நீ அப்படிச் செய்யப்பட்டவனா?"

இருவரும் சற்றுதூரம் மறுபடி பேசாமல் சென்றார்கள்.

பல:—"இங்கே, எதற்காக ஐயா, மறுபடி வந்தீர்?, பல நாளாக வராமல் இருந்தீரே. மறுபடி என் எஜமானனுக்குப் பிடித்து விட்டதோ சனியன்?"

சிதம்:—"எல்லாம் உன் எஜமானன் நன்மைக்குத்தான் அப்பா. பலராமா! இந்த உழக்கரிசி ஜீவன் இல்லாவிட்டால்—"

பல:—"நானா பலராமன்? நான் சங்கரன் அல்லவா?"

சிதம்:— "(தனக்குள்) பலராமனுடைய நடத்தை ஏதோ கோளாறாய் இருக்கிறது; இந் நிலைமையில் அவனை விரோதித்துக் கொள்வது புத்தியீனம். (வெளிப்படையாய்), என்னப்பா! நீ இவ்வளவு புத்திசாலியாய் இருந்தும், அந்தப் பழைய பத்திரிகைகளைச் சங்கரி பார்க்கும்படி இடங் கொடுத்தாயே!"

பல:—" நான் என்ன பண்ணுவேன்? சேந்தியில் பத்திரமாய்த் தான் வைத்திருந்தேன். சங்கரி அதைப்போய் எடுப்பாளென்று நினைத்தேனா?"

சிதம்:—" பலராம்! அதனால் எவ்வளவு சங்கடம் வந்து விட்டது தெரியுமா? மதுரை டவுன் முழுமையும் அந்தக் கேஸ் டாம் டாம்' அடித்துக்கிடக்கிறது."

பல:—"அதனால் இப்பொழுது என்ன? எல்லாம் முன்பிருந்த மாதிரிதானே?"

சிதம்:—"அப்படியா சொல்லுகிறது? போன ஸமாசாரம் மறுபடி ஏன் வெளிவரவேண்டும்? இப்பொழுது சோமுவின் பிள்ளை ராமஸ்வாமி அதைப்பற்றி விசாரிக்க வந்திருக்கிறான்."

பல:—(நிர்விசாரமாய்) "அதற்கென்ன?விசாரிக்கட்டுமே! உமக்கென்ன? எனக்கென்ன? பயமாய் இருக்கிறதா?"

சிதம்:—"அதனால் ஏற்படக்கூடிய கெடுதி இவ்வளவு என்று உனக்குத் தெரியவில்லை. அன்றிரவு நடந்த ஸமாசாரம் நமக்கு மாத்திரந்தான் தெரியும். ஆகையால், அதை வெளியிடாது இருப்பதே நலம்."

பல:— "(கைதட்டிக் குலுங்கச்சிரித்து), ஓஹோ! நீர் அன்றிரவு கொலை நடந்தபோது தோட்டத்திலேயே இருந்தீரே. அது வெளியாய்விடும் என்று பயப்படுகிறீரோ?"

சிதம்:—"அதுவும் கூடத்தான். ஜானகி அம்மாளைக் காப்பாற்றும் பொருட்டு, விசாரணையில் ஓர் சிறு பொய் சொல்லிவைத்தேன். நீயும் பொய் சொன்னாய். ஞாபகம் இருக்கிறதா?"

பல:—"என் எஜமானன நிமித்தம் நான் சொன்னேன். இந்த எஜமானியால்தானே இவ்வளவு அநர்த்தமும்? சரி. இப்பொழுது, என்ன ஆபத்து?"

சிதம்:—"ஒருவேளை அவ்விரு சிறுவர்களும் உன்னைக்கண்டு ஏதாவது கேட்கலாம். நீ ஒன்றுக்கும் இடம் கொடுக்காமல் இருந்தாயோ, பயமே இல்லை—"

பல:—"அது நான் பார்த்துக்கொள்கிறேன். சரி. என் தங்கை சிதை ஸமாசாரம்?"

சிதம்பரம் முகம் சற்று வாட்டமுற்றது. ஆயினும் மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டு, வருத்தத்துடன், "என்ன! அவள்தான் இறந்துபோனளே. உனக்குத்தான் தெரியுமே அது" என்று கூறி "இவனுடன் இனிமேல் வார்த்தையை வளர்ப்பதில் பயனில்லை." என்று தீர்மானித்து, ஒரு ரூபாயைப்பலராமன் கையில் கொடுத்து, இந்தா! வேஷ்டி வாங்கிக் கட்டிக்கொள். ஸ்டேஷன்

வந்துவிட்டது. உனக்கும் நாழிகையாய்விட்டது. உன் எஜமானன் காத்துக்கொண்டிருப்பார்" என்று சொல்லித் திடீரென்று 'பிளாட்பார'த்துள் நுழைந்தார்.

சங்கரனுக்குச் சிதம்பரத்தின்மேலுள்ள வெறுப்பெல்லாம் ரூபாயைக் கண்டமாத்திரத்தில் நீங்கி, 'இப்பொழுது, சிதம்பரத்தைப் பார்க்கிலும் உற்றதுணை தனக்காவது தன் எஜமானனுக்காவது இவ்வுலகத்திலேயே இல்லை' என்று உணர்ந்தான். இதுவரை நடந்த விஷயங்களை மனதில் சிந்தித்துக்கொண்டே பலராமன் வீட்டுக்குத்திரும்பி வரும்பொழுது, அவனுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று. உடனே அவன் ஒரு சிறு காகிதத்தில், அங்கிருந்த ஓர் விளக்கு வெளிச்சத்தில் ஏதோவரைந்து, காகிதத்தை மடித்து அதில் ஒரு சிறு கல்லைக்கட்டிக் கையில் அடக்கம் செய்துகொண்டு, ராமஸ்வாமியும் கைலாஸமும் தங்கி இருக்கும் ஜாகைக்கு வந்து சேர்ந்தான். முன் அறையில் ராமஸ்வாமி மாத்திரம், நாற்காலியில் சாய்ந்துகொண்டு, அவ்வறையின் பின்புறத்தைப்பார்த்துக்கொண்டு ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்தான். பலராமன் ஜன்னல் அண்டை சென்று, தன் கையில் இருந்த கல்லையும்கடிதத்தையும், ராமஸ்வாமி முன்னால் எறிந்துவிட்டு ஓடி மறைந்தான். ராமஸ்வாமி 'ஆ!' என்று திடுக்கிட்டு எழுந்து, அக்கடிதத்தைத் பிரித்துப் பார்க்க, அதில் கையெழுத்தாவது தேதியாவது இல்லை. அதி கேவலமான எழுத்தில், அதில்,

"ராமஸ்வாமி! நீயாகவே, தானே,கஷ்டத்தை இழுத்துவிட்டுக் கொள்ளுகிறாய். நான் சிநேகன். சொல்வதைக் கேள்: உடனே ஓடிப்போ."

என்று எழுதியிருந்தது. இதற்குள் கைலாசமும் வந்து சேர்ந்தான்.

கைலா:—"என்ன, ராமஸ்வாமி, சத்தம் போட்டாய்? அடுத்த அறையில் கேட்டதே!"

ராம:—"(கடிதத்தைத் தந்து) இதைப்பார்!"

கைலா:—"(வாசித்துவிட்டு), யார் எறிந்தது?"

ராம:—"தெரியவில்லை. திரும்பிப் பார்த்தேன். அதற்குள் ஓடி விட்டான்."

கைலா:—"சரி! சரி! இது சிதம்பரம் செய்த வேலைதான்."

ராம:—"என்ன! பைத்தியமா? யோசனையில்லாமல் சொல்லுகிறாயே. அவர் இப்படி எல்லாம் அற்பத்தனமாய்ச் செய்பவரா?"

கைலா:—"மனிதனுக்குக் கஷ்டம் வந்துவிட்டால், இன்ன தான்செய்வான், செய்யமாட்டான் என்ற விவஸ்தை உண்டா? சரி! இதைப் பத்திரமாய்க் காப்பாற்றி வைப்போம். கூடிய சீக்கிரத்தில நான் சொல்வது தான் வாஸ்தவம் என்று ருஜுப்படுத்துகிறேன்."

இவ்வாறு சொல்லிக் கடிதத்தை 'டைரி'ப் பைக்குள் பத்திரப் படுத்தினன். பிறகு அவன் ராமஸ்வாமியை நோக்கிச் "சிதம்பரத் தைத் தவிர, வேறு யாருக்கு நீ இங்கே இருப்பது உபத்திரவம்?" என்றான்.

ராம:—"ஒருவேளை, பலராமன், அதாவது சங்கரனுக்கா இருக்கலாம்?"

கைலா:—"ச்ஸ்! அவனுக்கு நாம் இங்கே வந்திருப்பதே தெரியாதே. (யோசித்துவிட்டு)—"ஏன்? அவன் ஒருவேளை சிதம்பரம் அனுப்பிய ஆளாய் இருக்கலாம்"

ராம:—"சிதம்பரம் சம்புவைப் பார்க்க வந்ததையும், சம்பு வெளியேவராமல் மடத்துக்குள்ளே இருப்பதையும், அந்த மடத்தி லிருந்து இக்கொலைசமாசாரம் வெளிப்பட்டதையும் பார்த்தால்—"

கைலா:—"என்ன தோன்றுகிறது உனக்கு?

ராம:—"சம்பு என்பவனே என் தகப்பனைக்கொன்ற தர்ம ராஜுவாக இருக்கலாம் என்று—"

R. S. நாராயணசாமி ஐயர், B.A., B.L.

சுக்கிரநீதித் தமிழ்மொழி பெயர்ப்பு.

வடமொழி தென்மொழியாகிய இரு பெரு மொழிகளினும் பாண்டித்தியம் வாய்ந்தவரும், எமது பரமாப்த நண்பரும் ஆகிய மகி பாலன்பட்டிவாசி, 'பண்டிதமணி' திருவாளர்: மு. கதிரேசச் செட்டியாரவர்கள், தாம் வடமொழியினின்று தமிழில் பெயர்ப் பாக இயற்றிய 'சுக்கிரநீதி' என்னும் உரைநூலினை எம் பார்வை க்கு அனுப்பியுள்ளார். அதனைப் பார்வையிட்டோம்.

தமிழ் நூற்றுறையுள் பெரிதும் பாராட்டப் பெறுவனவான அகப்பொருள் புறப்பொருள் நூற்களுள், புறப்பொருட்டுறை நூற் கள் மிகத்தொன்மையவாகிய வழக்குக்களையே பண்டை இலக்கண வரம்புக்களுக்கிணங்கப் பெரிதும்பொதுவாகக் கூறுவனவன்றி, அர சியல்முறைப் பாகுபாடுகள் பலவற்றையும் சிறப்பாகப் பிரித்து

விரித்தோதுவன அன்மை யாவரும் உணர்வர். தமிழ் மொழிக்கு அரிய கருவூலமாம் திருக்குறள் நூல்தானும் அவற்றைத் தெள்ளிதின் விளக்குவதேனும், பிற்றைநாட் காவிய புராண நூற்களும் இடையிடையே அவற்றை யொருவாற்றாற் கூறுவனவேனும், அவற்றை, விரித்துத் தனிச்சிறப்பு நூலாக வைத்து ஆராய்வனவல்ல. ஆயின் வடமொழிவாணர் அறங்களின் பல்வேறு திறங்களையும், அரசியல் முறையுள் விரசுறும் பகுதிகளையும் செவ்வனே ஆராய்ந்து தனிச் சிறப்பு நூலாகப் பலவியற்றியுள்ளனர் என்பது, அம்மொழி வல்லார் நன்குணர்ப. இவ்வாறு அரசியன்முறைத் தனிச்சிறப்பு நூலொன்று தமிழ்மொழிக்கண் நிலவாமையைப் பண்டும் நம் ஆன்றோர் உணர்ந் தோராவர். இக்குறையினை நிரப்பலுறுவான், நம் பண்டிதமணி, வடமொழியுள் திகழ்கின்ற 'சுக்கிரநீதி'யாம் அரசியல் முறைநூலினைத் தமிழில் மொழிபெயர்த்துதவினர். இவ்வாறு 'பிறமொழிப் பொருளைத் தமிழ் மொழிப்படுத்துரைத்தல், குறை நிரப்பலுறும் வழி நூற்றிறனும்' என்பது, 'தொகுத்தல் வகுத்தல் தொகை விரி மொழி பெயர்த், ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாலறிதலாம்.

இனி, அரசியனூலாக வடமொழியில் பிரகஸ்பதியார், சுக்கிரனார் ஆதியோர்கள் இயற்றிய 'பாருகஸ்பத்தியம்' 'ஔசநஸம்' என்பவற்றை நம் பண்டைத் தண்டமிழ்ப் புலவர்கள், அரியபெரியவாக மதித்துப் பாராட்டியமை, அவற்றைக் குறித்துத் தம் பாடல்களுள் சுட்டியவாற்றா னுணர்தல்கூடும். கலித்தொகையுள், மருதம் பாடிய மருதனிளநாகனார், "நறவினை வரைந்தார்க்கும் வரையார்க்கும் அவை யெடுத்து, அறவினை யின்புறூஉம் அந்தணரிருவருள், திறம்வேறு செய்தியின் நூல்" என்றும், கல்வியிற் பெரிய கம்பநாடர், தம் 'இராமாவதார'த்துள், திருவபிடேகப் படலத்துள், 'வெள்ளியும் பொன்னுமென்போர் விதிமுறை மெய்யிற்கொண்ட, ஒள்ளிய நாளினல்ல வோரையி னுலக மூன்றும், துள்ளினர் குனிப்ப மௌலி சூடினன் கடலில் வந்த, தெள்ளிய திருவுந் தெய்வப் பூமியுஞ் சேருந் தோளன்" என்றும், சுட்டியவாற்றால் தெளிக. ஆசிரியர் பரிமேலழகரும், தம் குறளுரையுள் இந்நூற்களைச் சுட்டிக்கூறுதலும் உரை நோக்கியறிக. இவ்வாறு நம் ஆன்றோர்களால் பாராட்டப்பெற்ற வடநூற்களுள் ஒன்றன் பொருளைத் தமிழின்கண்ணே நாம் பெற்றமை, அரும்பேற்று ளொன்றன்றோ? இத்தகைய தமிழர் பெரும்

பேற்றுக்குக் காரணமாகியோர் நமது பண்டிதமணி செட்டியாரவர்களாயின், தமிழகத்து நன்மக்கள் இவர்பாற்கொண்ட கடப்பாட்டினை யவர்களே நன்கறிந்து போற்றற் குரியார் என்பது சால்பாகும்.

இனி, நமது பண்டிதமணியார், தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்து ஆண்டுநிறைவு விழாவில் தலைவராயமர்ந்து புரிந்த அறிவு மிக்க விரிவுரையில், தமிழ்மொழியின் வளர்ச்சிக்குரிய நெறிகளை எடுத்துரைக்குங்கால், மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையைச் செவ்வதின் எடுத்துரைத்து வலியுறுத்தியதற்கு இணங்கத் தாமே அத்துறையிலுழைத்து வழிகாட்டியமை பெரிதும் போற்றற்பால தாம். மொழிபெயர்ப்பு, பொருள்பிறழாமைச் செய்யப்பட்டுள்ள விஷயம்,தமிழ்ப் பயிர்ச்சிமிக்க வடமொழிவாணர்கள் பலரும்பாராட்டி அபிப்பிராயந் தந்தமையறிந்து மகிழ்கின்றோம். நூற்பொருளைத் தெள்ளிதின் உணர்ந்து கோடற்குக் குறிப்புரைகள் கொடுத்துள்ளவற்றை ஊன்றிநோக்கின், அவை எத்துணை ஆராய்ச்சித் திறனுடையன வென்பது எவர்க்கும் புலப்படும்.

இந்நூற் பொருளாராய்ச்சியால் திருக்குறள்நூற் பொருட்டிட்பங்கள் பலவும், இதன் நுட்பங்கள் பலவும் நன்குஅறிந்து கோடலாம் என்பதும் அறிதற்பாலது. பரிமேலழகரும் ஆண்டாண்டு இவ்விடநூற் பொருண்மைகளை எடுத்துக்காட்டி நிறுவுதல் அறிஞர் உணர்வர். அவற்றையும் இப்வாசிரியர் எடுத்து விளக்கிச் செல்கின்றனர். மூலத்தில் ஐயத்திற்குரியனவாகிய சிலவற்றைத் தடைவிடைகளால் விளக்கிக்கூறும் விளக்கங்கள் இதன் ஆசிரியர் 'பலகலைக் குரிசில்' என்பதைநன்று நிறுவும். இந்நூற் பொருட்டிறங்கள் யாவையும் இதற்குமெய்பறிஞர்பலர் கூறியுள்ள ஆராய்ச்சிமதிப்புரையாலும் உள்ளுறை யாராய்ச்சியாலும் அறிந்து மகிழ்க்கடவர்.

இவ்வரிய பெரிய நூலினை வெளிப்படுத்தற்குத் தக்க துணையாய்ச் செட்டியாரவர்களை ஊக்கி நிறை வேற்றுவித்துப் பதிப்பு வேளியிடுசெய்த மேலை சிவபுரிச் சன்மார்க்கச் சபையாரின் தமிழ்த்தொண்டின் தகைமை பெரிதும் பாராட்டற்பாலது. இது போலவே, இன்னும் அரியபலவற்றையும், இவர்களையும் இவர்கள் போன்ற மற்றப் புலவர்களையும்கொண்டு மொழிபெயர்த் துதவுதலை மேற்கொண்டு முடித்தற்குத் தமிழணங்கு திருவருள் புரிவாளாக இவ்வரிய நூலை மேற்கூறிய சபையாரிடம் பெறலாம். விலை: ரூ 4.

— பத்திராதிபர்.

உலோகோபகாரியின் உண்மை இலக்கணம்.

நீ உண்மையான உலோகோபகாரியாக விரும்பின், உன்னிடம் மூன்று லக்ஷணங்கள் இருந்தே தீரவேண்டும்:

முதன்மையாக வேண்டுவது, அநுதாபமே. உனது ஸர்வஜன சகோதரரைக் குறித்து நீ அநுதாபப்படுவது உண்மையா? இவ்வுலகில் எவ்வளவோ துக்கமும் அஞ்ஞானமும் விபரீதாசாரமும் நிறைந்துளதென உள்ளவாறு உணர்ந்து, நீ வருந்துவது உண்மையா? இவ்வெண்ணம் உன் தேகமுழுவதும் வியாபித்துளதா? உன் இரத்தத்திலும் அது கலந்து ஓடிப் பரவுகிறதா? உன் நரம்புகளிலும் அது உறைத்துக் குறுகுறுக்கின்றதா? உன் உடலிலுள்ள ஒவ்வொரு நாடியிலும் இண்டு இடுக்குகளிலும் அவ்வெண்ணம் ஊடுருவி ஓடுகிறதா? உன்னிடத்தில் முற்றிலும் அவ்வநுதாபமே நிரம்பியுள்ளதா? இவ்வளவும் உன்னிடத்தில் இருந்தால், அதுவே, உலோகோபகார லக்ஷணத்தின் முதற்படியாம்.

அடுத்த விஷயம்: உலகத்தின் தீமைகட்கு ஒரு பரிகாரம் தேர்ந்து கண்டிருக்கிறாயா? பூர்வீக அபிப்பிராயங்களெல்லாம் அஞ்ஞானமயமாகவோ, விபரீத ஆசாரமாகவோ இருக்கலாம். அவ் அஞ்ஞானக்கட்டிகளிலும் எவ்வளவோ உண்மைகள் சொர்ணம்போல் விளங்குகின்றன. களிம்பையும் அழுக்கையும் தள்ளிச் சொர்ணத்தைமட்டும் பிரித்துக் கைக்கொள்ள உபாயம் அறிந்திருக்கிறாயா? இவ்வளவும் நீ செய்திருந்தாலும், அது இரண்டாவது படியேயாம்.

அவசியமாய் இருந்து தீரவேண்டிய இதனினும் மேலான மற்றொரு விஷயமும் உள்ளது: உனது உட்கருத்து என்ன? பொன்னாசையாலோ, புகழாசையாலோ அல்லது பெருமையாலோ தூண்டப்பட்டு நீ முயல முன்வரவில்லை என்பது உனக்கே நிச்சயந்தானா? இவ்வுலக முழுதுமே உன்னை ஒடுக்க நினைத்தாலும் நீ உன் லக்ஷ்யத்தை விடாது பற்றி முயன்று மேற்சென்று கொண்டே இருக்கப் போதிய உறுதி உனக்குண்டா? உனக்குப் பிராணாபாயமே நேர்ந்தாலும், உன் கடமையைச் செய்துமுடிக்க உன்னாலாகுமா? உன் பிராணனுள்ளவரை உன் இருதயத்தில் ஓர் அடிப்பு காணப்படும் வரையில், நீ எடுத்த நற்றொழிலைச் சாதித்துத் தீருவாய் என்ற நிச்சயம் உனக்குண்டா?

மேற்கூறிய லக்ஷணங்களெல்லாம் குறைவற அமையின், நீ உண்மையில் உலோகோபகாரியே. நீயே ஆசாரியன்; புருஷோத்தமன். மானிடவர்க்கத்தின் பெறலரும் பேறு. ஆனால், மனிதனோ, அவசரபுத்தியும் அற்ப மதியும் உள்ளவன். ஆறப்பொறுத்துப் பலன் காணும் பொறுமையும், திறமையும், அவனுக்கில்லை. ஆணை செலுத்தவும் உடனே பலன் காணவுமே அவன் ஆத்திரத்துடன்விரும்புகிறான். ஏன்? அப்பலனை அவன்தானே அனுபவிக்கவிரும்புகிறான். உண்மையில் பிறரைப்பற்றிய சிந்தனையே அவனுக்கில்லை. கடமையை அவன் அனுஷ்டிப்பவன் அல்லன். ஸ்ரீ கிருஷ்ணனோ, "கர்மத்திற்கு மட்டும் உனக்கு அதிகாரமுண்டு. அதன் பயனிலில்லை. ஆதலின் "உறு பயன் கருதாது உஞற்றுக கடமையை" என்றார். ஏன் பயனைப் பற்றுகிறாய்? கடமையே நம்மைச் சேர்ந்தது. பலன்களைப்பற்றிய சிந்தனை எவனுக்கும் வேண்டா. பலன்கள் தாமே வரும். ஆனால் மனிதனுக்குப் பொறுமையே இல்லை. ஆதலின் அவன் எந்தக்காரியத்தையும் சாதிக்க முன் வந்து முயலுகிறான். உலகெங்கும் சீர்திருத்தம் செய்ய முயலும் பெரும்பாலோர் இவ்வகுப்பினரே. [விவேகானந்தரின் வியன்மொழி.]

—பத்திராதிபர்,

உ

சிரத்தானந்த ஸ்வாமிகளின்மீது இரங்கற்பாக்கள்.

பல்வளமுஞ் செறிந்தஎழிற் பாஞ்சாலம் செய்ததவப் பயனா வந்து
மல்குகலை அறிவுடைமை மிக்குவக்கி லாய்ச்செல்வ வளம் வாய்ந் தென்றும்
ஒல்வகைப்ல் அறவினைகள் ஓவாதே செல்வகை செய்(து) உலகு போற்ற
இல்லறநன் னிலைக்கணிருந் தழி'லாலா முன்ஷீராம்' எனும்பேர் உற்றாய்! 1

['ஒல்வகை' &c—'ஒல்லும் வகையால்' என்ற குறளின் கருத்தமைப்பு]

உரத்தானந் தமருயத்தன் உபதேசம் பொருள் ஆவி உடலம் ஈந்து
சிரத்தானம் வகித்ததனால் சிரத்தானந் தம்கொண்ட சிரந்தானந்த!
நரத்தானந் திடும்ஒருவன் நடலையினால் கதுமெனஓர் நஞ்சு தோய்த்த
சரத்தானந் தொருகலைமான் சாய்ந்ததுபோற் சாய்ந்தனையே தரணிமீதே! 2

[உரத்தால் நந்தமர் உய்ய-விவேகம் வலிமை ஊக்கம் முதலியவற்றால் நம்மவர்கள் உயிர் வாழ; சிரத்தானம்-தலைமை ஸ்தானம்; சிரத்தானந்தம்-சிரத்தையும் ஆனந்தமும்; நரத்தால் நந்திடும்-கேவலம் மனிதப்பிறவிக்குரிய குறைகளால் சீரழிந்து வருந்தும்; நடலை-வஞ்சகம்; கதுமென-திடீரென எவரும் எதிர்பாராதபடி, சரத்தால் நந்து-பாணத்தால் அழிந்த]

உத்தம!நின் சேதி மலை நாட்டுச்சே திச்சேதி ஒருவா றுரைக்கும்:
புத்திவிசா லம்பெறு'மெய்ப் பொருள் நாயனார்'எனவே பொலிந்தா யால்நீ. 3
'முத்திநா தனைப்போன்றா னல்கோலமு அப்துல்ரஷீத் மோச நெஞ்சன்.
'தந்நன் எனத் தத்தொழிக்க முயன்றநின்றா னல்கினது தர்மசிங்கே.

[நின்சேதி-உன்னைப்பற்றிய விஷயம்; மலைநாட்டுச் சேதிச் சேதி-மலையமா நாட்டின் தலைநகரான சேதிமா நகரில் நிகழ்ந்த செய்தி; தத்து ஒழிக்க—துன்பத்தை நீக்க. சேதி நகரில் நிகழ்ந்த செய்தி விவரத்தைப் பெரிய புராணத்தில், 'மெய்ப்பொருள்நாயனார் சரித்திரத்'தில் கண்டு தெளிக.]

பல்லவர்நல் அமெரிக்கர் இந்துமதம் தழுவ,மனம் பதறி, முன்னோர்
புல்லியன் 'ஸான் பிரான்ஸிஸ்கோ' புனிதஇந்து ஆலயத்தேபுகுந்து, யாரும்
சொல்லரிய நிஷ்டையிலார் 'ஸ்வாமி திரி குணாதீத் தூயோன் மீது [னே 4
வல்லவெடி குண்டெறிந்து வதைத்ததுபோல் இனைஇவனும் வதைத்திட்டா

[ஸ்வாமி திரிகுணாதீதர்:-ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஊழிய சங்கத்தைச் சேர்ந்த பெரியாரில் ஒருவர். விவேகானந்த ஸ்வாமிகளின் சகபாடி. அமெரிக்காவில் உள்ள பல கிறிஸ்தவ வெள்ளையர்களை இந்துமதத்தில் திருப்பி, அவர்களுடைய பெரும் பொருளைக்கொண்டே, பஸிபிக் மகா சமுத்திரக் கரையில், ஸான் பிரான்ஸிஸ்கோ என்ற இடத்தில், ஒரு பரிசுத்த இந்து ஆலயம் கட்டிய பரமதீரர். ஸான் பிரான்ஸிஸ்கோவில் உள்ள பிரசித்த

கிறிஸ்தவ ஆலயங்களும், கட்டிடங்களும், சமீபத்திற்றோன்றிய பூகம்பத்தால் அழிவுற்ற காலத்தில், தம் நிலையைப்பற்றி அஞ்சி வருந்தியோர்க்கு, "நம் ஆலயமும் நானும் சிஷ்யகோடிகளும் க்ஷேமமாயுள்ளோம்" என்று தந்தி அனுப்பியவர். இவர் புகழ்கண்டு சகியாப் பித்தன் ஒருவன், இவரை மூர்க்க வஞ்சகத்துடன் வதைத்த வரலாறே இங்கு குறிப்பிட்ட விஷயம். இவனை அக்கணமே உயிர்வாங்கத்தயாராயிருந்தோரைத் தடுத்து, ஸ்வாமிகள், அவன் பித்தனேயாதலின், அவனை எதுஃ செய்யாது விட்டுவிடுமாறு வேண்டியதையும், அவனை இரங்கி ஆசிர்வதித்து அனுப்பியதையுமட்டும் இப்பொழுது நினைப்பூட்டுகிறோம். ஸ்வாமி சிரத்தானந்தரும், கோமுக ஷ்யாக்ர அப்துல் ரஷீதை அவ்வாறே செய்திருக்கக்கூடுமென்பதே மகாத்மா காந்தி போன்ற அறிஞர்களின் துணிபு.]

ஆற்றலளித் திடுசத்யாக் கிரகஇயக் கம்,உச்சத் தார்ந்த அந்நாள்,
நாற்றிசையும் எத்திசைகொள் நினைஇஸ்லா மியர்வலிந்து நன்கு போற்றி
மேற்படுதம் குருமாரே மேவவல்ல மருதிலுயர் மேடை மீது
வீற்றிருக்க நினைவிரும்பி நினதுதிரு வாக்குநலம் மேற்கொண் டாரே. 5

[அந்நாள்-பல உயிர்வதைகள் பழிக்கஞ்சாப் பாவிகளால் நிகழ்ந்த 1919-ஆம் வருஷம். மருதி-டில்லியில் உள்ள ஜும்மா மஸ்ஜீத் பள்ளிவாசல்]

ஒன்றுமனத் தினராஅன் றுனைமதித்த அவர்களிலே ஒருவன் அந்தோ!
இன்றுனைக்கொன் றிட்டதெனே! அம்மதஉத் தமர்யாரும்
[இடியேறுண்டோர்
என்றெவரும் இசைப்பமதி கலங்கித்தா யினைஇழந்த இளங்கன் றென்னக்
கன்றிஅழு தவன்செயலைக் கடிந்திகழின் நின்தூய்மை கழறற் பாற்றோ? 6

[ஒன்றும் மனத்தினரா—அபிப்பிராய பேதம் இல்லாதவர்களாய்; அம்மத உத்தமர்-இஸ்லாமிய சிரேஷ்டர்களான மௌலானா மகமதலி, ஷௌகட்அலி, ஜின்னா முதலியோர்; கன்றி—வருந்தி.]

சிதமிகுத்த நினைவதைத்த கதமிகுத்த காதகனோர் தீமை சான்ற
மதமிகுத்த வெறிபிடித்த மதியிலியால், மதவெறிதான் மன்னியோனே.
பதர்நிகர்த்த இவன்இழைத்த பழிநினைத்துப் பிறமதத்தர் பண்புபோற்றும்
இதமிகுத்த எழில்குணத்த எமதிஸ்லாம் சோதரரை இகழ்தி லேமால். 7

[சிதம்—விவேகம்; கதம்—கோபம்; மதவெறி மன்னியோன்—உடற் கொழுப்பும் வீண் வைத்தியமும் வாய்ந்தவன்; மதஉணர்ச்சியோ, அதனாலுற்ற ஆவேசமோ மேலிட்டோன் அல்லன். மதஉணர்ச்சி இம்மியுமிருப்பின், இஸ்லாமிய மதம் இத்தகைய ஈனப் படுகொலைக்கு இடந்தராது என்பதை உணர்ந்திருப்பான் என்பது உண்மை மகமதியர் துணிபு.]

உள்ளத்தாற் பொய்யாதே ஒழுங்குதிற் சிரங்கிலம்யாம்: உலகத்துள்ளார்
உள்ளத்துள் எல்லாம்நீ உளன் ஆனாய்; நீமரணம் உற்றோன் இல்லை.
கள்ளத்தால் நினைக்கொன்ற காதகனே கற்பாந்த காலம், யாரும்
எள்ளத்தான், பழிபாவப் படுகுழியில் வீழ்ந்தமைக்கே இரங்கி னேமே! 8

'உள்ளத்தாற்.........உளன்' என்பது குறள்வாக்கின் அமைப்பு.]

எழுவரு டங்களுக்கு முன்,சத்யாக் ரகத்திருநாள் இயன்ற காலை,
பாழியசூர்க் கப்படைஞர், ஜனத்திரளைச் சுடவருங்கால், பயப் படாமல்
"வாழிய! நீர். எனைச்சுடுமின் முதலில்" என்று மார்காட்டி வாய்மை கூறி
வேழமென நின்றவரைச் சொல்வலியால் செயலறச்செய் வீர தீர!

[இயன்றகாலை—1919ஆ மகாத்மா காந்தியால் விதிக்கப்பட்டபோது. பாழிய—வீரமும் பெருமையுமிக்க; வாய்மை—இந்திய சகோதரர் தன்மை; அவர்களிடமிருந்து எதிர்பார்க்கும் கடமை, பொருந்தாச் செய்கைகளின் புன்மை, முதலியவற்றைப் பற்றிய உண்மை. உருக்குருகக் கல்லுருகக் கன்னெஞ்சர் மனமுருக இவர்கூறிய மொழிகளையும், மூர்க்கமிக்குவந்த கூர்க்கப்படைஞர் நாணி இம்மியும் தீங்கிழையாது திரும்பிச்சென்ற அதிசயத்தையும், அக்காலப் பத்திரிகைகளிற் கண்டுணர்ந்தறிக: வேழமென நின்றவரை—'யானைபோல் மதர்த்துநின்று சுடவந்த கூர்க்கரை' என்றும்; தம் 'வயோதிகத்தும் இறுமாந்து யானைக்கன்றுபோல் தாம்நின்று அக்கூர்க்கரை'என்றும் பொருள்படும்.]

அருமைமிகு நின்பொருள்முற் றளித்துக்கங் கைக்கரையில் அரித்வாரத்தில்
இருமையினும் நலம்புரியும் குருகுலம்ஒன் றினைநிறுவி இலங்கச்செய்தாய்.
பெருமையுடன் இலங்குமதற் கைம்பதினா யிரம்வெண்பொன்பெற்றநின்றன்
உரிமைபெறு நூனிலயம் ஒன்றளித்துப் பலர்க்குநலம் உதவினையே. 10

(குருகுலம்—ஆரிய சமாஜத்தை ஸ்தாபித்த ஸ்வாமி தயானந்த சரஸ்வதிகளின் விருப்பு நிறைவேற ஸ்தாபிக்கப்பட்டது இது. வெண்பொன்—ரூபாய். நூல்நிலயம்—புத்தகசாலை.]

செம்மைசெய்இக் குருகுலஐ யையாண்டுத் ஸவம்விரைவில் சிறப்பாச்செய்ய
அம்ம! நினைந் தாய். அதற்குள் இவ்வுலகை விட்டகன்றாய் அந்தோ! அந்தோ!
எம்மனிதர் உளம்வருந்தார்? எவர்விழியே நீர்வடியா திருக்கும்? கூறாய்.
நம்மவர்சொல்'குயவன்தடி கார'னுக்காம் பழமொழிபோல் நடந்ததென்னே!

[ஐயை யாண்டு உத்ஸவம்—ஸில்வர் ஜூபிலி (Silver Jubilee) என்ற இருபத்தைந்தாவது வருடத் திருநாள். விரைவில்—அடுத்த பிப்ரவரி மாதத்தில். குயவன் தடிகாரன் ஆகிய இவர்களுக்காம் பழமொழி—'குயவனுக்குப் பலநாள் வேலை; தடிகாரனுக்குக் கால்நாழிகை வேலை]

திக்கறநம் இந்துமதம் தழையஇரு தினசரிக்கா சிரிய ராயும்,
தக்கநலம் பிறர்க்கியற்ற, சமயத்தொண் டினைப்புரியச் சன்யாசத்திற்
புக்கும், உளம் பூரித்த நினைப்போன்ற புண்யரெவர் பூலோ கத்தே?
ஒக்கஉயர் உருவமுடன் உயர்நடையும் உயர்குணமும் ஒருங்குற் றோனே!12

[இரு தினசரிகள்—தம் வயோதிகத்தும் தாமே ஆசிரியராய் நின்று ஸ்வாமிகள் நடத்தி வந்த 'தேஜஸ்' 'அர்ஜுனு' என்ற தினசரி உருது, ஹிந்திப் பத்திரிகைகள். இவைகளைத் தவிர 'லிபரேடர்' (Liberator) என்ற ஆங்கில வாரப் பத்திரிகையும் ஸ்வாமிகள் தம் உயிர் விடும் வரை நடத்தி யிருக்கிறார்கள்.]

மணமலிந்த சிலமலர் வேர் மடிவுறினும் மறைவுறினும் மணமே வீசும்:
வணமலிந்த ரோஜாசண் பகம் வகுளம் வேரி இவை வல்ல சான்றும்,
குணமலிந்த நினதுடலம் குலைவுறினும் குற்றமில்லை: கோதில் மக்கள்
கணமலிந்த எவ்வுலகும் நினது புகழ்ச் செயல் என்றும் கமழும் கண்டாய் 13

[மணம் மலிந்த—அழகு மிக்க; வகுளம்—மகழம்பூ; வேரி—வெட்டிவேர். வல்ல சான்று—பலத்த சாட்சி; கணம்—கூட்டம்].

'அக்ஷயம்' என் பதில் அகரம் பண்டறிசுட் டாய்க்ஷயமார் ஆண்டென்றும், நின்
வக்ஷமதை வஞ்சன்வெடி கழித்தமதி மார்கழி'ப் பேர் வாய்ந்த தென்றும்,
பக்ஷமற 'வருந்திடுநா ளேதருநாள்' என்றும், நீ பாரை நீத்த
'அக்ஷய ஆண்'டின் பொருள்,'மார் கழி'மாதப் பொருள்,'குருநாள்' அர்த்தம்
[ஓர்ந்தோம் 14

[அ'க்ஷய'—யாரும் எளிதில் உணரவல்ல சீரழிவு விளக்கும் வருஷம். வக்ஷம்—மார்பு; தரு—வருத்தம்; தருநாள்—வருத்தம் விளக்கும் தினம்].

நின்உயிர்போல் நீ வளர்த்த குருகுலம்பத் திரிகையெலாம் நிலவி வாழி!
நன்னர்நிறு வியநினது கன்யாவித் யா லயமும் நாளும் வாழி!
நர்கரில் நின்தநயர் குலத்தவ ரா தியர்என்றும் தழைத்து வாழி!
மின்னுபுக ழொடுநின்தா பனம்பிறவும் மேதினிக்கண் விளங்கி வாழி. 15

[கன்யா மகா வித்யாலயம்—ஜலந்தரில் ஸ்தாபிக்கப்பட்ட பெண்கள் வித்யாலயம். தநயர்—இந்திரர் என்ற போதகாசிரியர் முதலியோர்; பிற தாபனங்களில் சில—இந்திரப்பிரஸ்தம், கான்பூரிலிருக்கும் கல்வி நிலயங்கள் வேறு வட இந்தியக் கல்லூரிகள் முதலியன].

ம. கோபாலகிருஷ்ணன்.

விடுகதை வினா.

நந்தமிழ்த்தாய் அணிகின்ற நல்லணியில் ஒன்றும்.
நற்புலவீர் ! ஐந்தெழுத்தால் நன்கிலங்கும் அதுவே.
முந்தும் இரண் டெழுத்தும்எழில் முந்நீரில் தோன்றி
முடிமன்னர் முதல்யாரும் முன்னி யணிஓர்கல்.
அந்தமிகு பின்மூன் றும் அறையில் அணிஅணியாம்.
அதிலும்இரு கடைஎழுத்தும் ஆராயின் பனுவல்.
விந்தையுற முதல்கடைகள் வெற்பாதல் காண்மின்.
விளம்புமின்யான் விரும்பிநுமை வினவும்அணி யாதோ ?

தமிழ்ப்பண்டிதர் : சே. ரா. கணபதி சுப்பிரமணிய ஐயர்,

போங்கும் மங்களம் எங்கும் தங்குக.

இரங்கூன் "தேசோபகாரி" ஆசிரியரான்

சுதந்திரதீர சுப்பைய நாயுடுவின் விடுதலை மகிழ்ச்சிப் பாக்கள்.

சுப்பையா நாயுடுவே! சொல்லார் சுதந்தரமே
இப்புவிக்கு நாடும் இயல்புடைபோய்!—ஒப்பில்
உயிர்த்துணையே! உன்னை உயிருடனே கண்ட
பெயர்க்(கு)உறும்பே றேஉயர்ந்த பேறு. (1)

[பேறு — பாக்கியம்.]

"கார்பெற்ற தோகையோ! கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—சீர்பெற்ற"
மாதீர! நிற்கண்ட மாநகராம் ரங்கூனுக்(கு)
"யாதோ உரைப்பேன் எதிர்?" (2)

[3-வதுவரிமட்டும் நமது. பிற புகழேந்தியார் வாக்கு.]

"கருங்கற் சுவர்சூழல் காவலிடம் ஆமோ?
இரும்பிக்கம் பிக்கூடும் என்னே?—இருஞ்சிறையோ?
மாசில் மனமும் மனத்தெளிவும் வாய்ந்தவருக்(கு)
ஆசிரமம் ஆகும் அவை" (3)

[Richard Lovelace என்ற புலவன்கூறிய "Stone walls do not a prison make" என்ற செய்யுளின் மொழிபெயர்ப்பு இது]

என்றேநம் தேசநலம் எண்ணிச் சுதந்தரமே
துன்றுமன நீயும்நம் சுந்தரமும்—வன்சிறையே
ஏற்(று)எமக்காத் துன்புற்றீர். யாரஉறுவர்? நம்செய்கைக்(கு)
ஆற்றுதவி தேர்கிலே மால். (4)

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்(டு)
என்ஆற்றும் கொல்லோ உல"கென்ற—செம்மொழியை
மெய்யாக நன்குணர்ந்தேம். மேதினியோர் ஈடேற
ஐயிர்! நீர் வாழ்திர்பல் ஆண்டு. (5)

[கைம்மாறு......உலகு—திருக்குறள்]

நேசோப காரகன் னெஞ்சர் இபனுதவி
தேசோப காரி தினந்தழைத்து—மாசோபம்
மன்பதைகள் எய்தாத வண்ணம் புரிவாரேல்
இன்பதையே எய்துகிலார் யார்?
[மாசோபம்—பெருந் துன்பம்.]

"அன்புடையார் என்பும்உரி யர்பிறர்க்(கு) என்(று) ஆன்றமைந்த
மன்புலவன் சொற்ற மறைமொழியை—வன்புறுத்த
நின்னைப்போல் நல்லோர் நிலவலின்,நின் பத்திரிகை
தன்னைப்போல் ஓங்கும் தழைத்து. (7)

[ஆன்றமைந்த மன்புலவன்—திருவள்ளுவர். வன்புறுத்த-வலியுறுத்த
நிலவலின்-புகழொடு விளங்கலால்]

ம. கோபாலகிருஷ்ணன்.

புறங்கூறாமை.

(இரண்டாம் தொகுதி 310-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

காரணம் விளங்காவிடத்து, நாம் ஒருவர் செய்கையைக் குறித்து விபரீதமாகக் கருதவொண்ணாது. ஏனெனில், அவர் செய்கை தகாததுபோல் தோன்றினும், உண்மை வெளிப்பட்டதும், நிர்மல மானதா யிருக்கக் காண்போம்.

புறஞ்சொற் கூறுவோன் தர்மங்களை நன்றாக எடுத்துப்பேசி னும், அவனது போலித்தன்மையை அவனது மனப்புன்மை காட்டிவிடும். நற்குடிப் பிறந்தார்க்கு அப்புன்மை பொருந்தாது. சக வாசதோஷத்தாலும், ஒருவர்க்கு இவ்விழிகுணம் வந்தெய்தல் கூடும். இக்குணம், தொடங்குங்கால் இன்பமாய்ப் பின் பகைமைத்தீமை யைப் பெருக்கி முடிவில் கோரமரணத்தையும் உண்டாக்கும். அது காரணமாக இறந்து படுதலினும், தாமாகவே உயிர் துறத்தல் எத்து ணைச் சிறப்புடையது! இதுபற்றி அன்றோ, திருவள்ளுவ நாயனாரும்,

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின், சாதல்
அறங்கூறு மாக்கந் தரும்" என்றார்.

"ஒருவனைக் கண்டவிடத்து, முகமலர்ச்சி காட்டிக் கல்லும் உருகும்படி கனிவாகப்பேசி, அவனைக் காணாவிடத்துப் புறங்கூறு கிற அற்பர்களின் தன்மைக் கஞ்சியே தேவர்கள் எப்பொழுதும் கண்மூடாது விழித்து நிற்பாராயினர்" என்ற விநோதக் கருத் தமைத்து,

"முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்(று)
இழித்துரைக்குஞ் சான்றோரை யஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை." எனப்

புறங்கூறலின் இழிவை விளக்கியிருக்கின்றனர் திருமுனைப்பாடியார்.

சிலர், விளையாட்டுத்தனமாகப் புறங்கூறித் திரிகிறார்கள். பிறர்க்கதனால் நகைப்புண்டாம் என்பதே அவர்களின் நோக்கம். இத்தகைய வினர்களைப் பற்றிக் குமரகுருபரர்,

"பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனாக் கொள்வான்—பயமின்று
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்வான்போற்
கைவிதிர்த் தஞ்சப் படும்." என எச்சரிக்கின்றார்.

புறங்கூறலைக் குறித்து எழுதும்போது சுகுணசுந்தரி சரிதையில் உள்ள ஒரு கதை நம் ஞாபகத்துக்கு வருகின்றது.

"ஒருகாலத்தில் ஒருமனிதனைக் கடிக்க ஒருநாகம் தொடர்ந்தது. அம்மனிதன் அந் நாகத்தை நோக்கி, 'ஏ பாம்பே! உனக்கு நான் ஒரு தீமையும் செய்ததில்லையே! என்னை வீணில் கடித்துக் கொல்வதினால் உனக்கு வரும் பிரயோஜனம் என்ன? சிங்கம், புலி, முதலிய துஷ்ட மிருகங்கள் மாம்சபக்ஷணிகளாகையால் அவைகள் மனிதனைக் கொல்ல, நியாயம் இருக்கிறது. அப்படிப்பட்ட நியாயமில்லாமல் வீணாக என்னையேன் கொல்லத் துரத்துகிறாய்? என்றான். அதற்கு அந் நாகம், 'இந்தக் கேள்வி என்னைக் கேட்கவேண்டாம். உன்னுடைய வர்க்கத்தாரையே கேள். உங்களுக்கு யாதொரு தீங்கும் செய்யாதவர்கள் மேலே நீங்களே புறஞ்சொற்கூறி ஒருவரை ஒருவர் கெடுத்துக்கொள்ள வில்லையா? அந்தக் குணம் உங்களிடத்தில் இருக்கிறவரையில் என்னுடைய குணத்தை நானும் விடேன்' என்று கூறிற்று" என்பதே அது. ஆதலால்,

"பிறரைப் பெருஞ்சுட்டு வேண்டுவான், யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்"

என்பதைக் கடைப்பிடித்து நன்மை அடைய முயலுவோமாக. சுபம்!

தமிழ்ப்பண்டிதர்: சே. ரா. கணபதி சுப்பிரமண்ய ஐயர்,
போர்டு ஹைஸ்கூல், கொள்ளேகாலம்.

தமிழ் இலக்கியம்.

"இலக்கியத்தினின்று எடுபடுமிலக்கணம்" என்பதனால் இலக்கியம் என்பது எவ்வகையானும் இலக்கணத்தினுஞ் சிறந்தது என்பது ஏற்கும். இலக்கணம், இலக்கியத்தின் அமைதியேயாயிருத்தலின், அஃது இலக்கிய ஆராய்ச்சி செய்தற்கும் இலக்கிய நூல்களை இயற்றுதற்கும் கற்பித்தற்குமே சாலப்பயன்றருவதாகும்.

இலக்கண நூல்களில்வழி மிக்க கூர்மையில்லாத புத்தியுடையவர்கட்கு இலக்கிய நூல்களை இயைபுற அறிந்துகொள்வது இயலாததொன்றே. ஆகலின் இலக்கணமும் சான்றோரெல்லாரானும் தழுவத்தக்கதாகும். சுருங்கக்கூறுமிடத்து, இலக்கண இலக்கியங்கள் பாஷைக்கு இருகண்கள்போலும் என்பது தெள்ளிதின் உணரக்கிடக்கின்றது. அவற்றுளும் பல்வகைப்பட்ட பொருளை எடுத்துக் கூறுவது இலக்கியமே யாகலான் இலக்கிய நூல்கள் பல்லாற்றானும் அறிவை விளக்குவனவாயுள்ளன. இலக்கண நூல்கள் அவ்வாறின்றி இலக்கண நுட்பங்களைமட்டுமே கூறும் என்பது ஈண்டுணரத்தக்கது. இலக்கணம், இலக்கிய நூல்களைக் கற்றற்குக் கருவி மாத்திரையாய் நிற்கின்றது.

இலக்கிய நூல்கள் ஈண்டு நிகழும் பாஷைகளினுட் பெரும்பாலான வற்றிற்கும் உளவெனினும், அவற்றுள் தமிழ், ஆரியம் என்னுமி வ்விரண்டினுமே சிறந்து விளங்குகின்றன. சொல்லின்பம் பொருளின்பந் தந்து நிற்கும் அழியாத பெருமையினை உடைய கவிகளெல்லாம் அவ்விரண்டு பாஷைகளினுள்ளும் மலிந்துகிடக்கின்றன. ஏனைய மொழிகளெல்லாம் அத்துணைப் பொருள்நுட்பமும் பொருள் இனிமையும் சொல் நுட்பமும், சொல் இனிமையும் அமைந்த செய்யுட்கள் இருப்பதாகத் துணிந்து கூறுவார் யாருமிலரெனவே நம்புகின்றோம். ஏனெனில், சான்றோரால் இவ்விரண்டு மொழிகளுமே சொல்லின் கிழத்திக்கு, இரு கண்களாகக் கூறப்பட்டன. ஏனைய மொழிகளனைத்தும் எவ்வகையானும் இவ்விரு மொழிகட்கும் கீழ்ப்பட்டனவே என்பது, இதனால் விளங்குகின்றது. அவற்றுளும் தமிழ்மொழியே கலைமகட்கு வலக்கண்ணாகச் சான்றோர் கூறுப. அத்தகைச் சிறப்பினையுடைய தமிழ்மொழிக் கண்ணுள்ள இலக்கண இலக்கிய நூல்கள் அளவிறந்தன. ஈண்டு இலக்கிய நூல்களைப்பற்றி ஆராயுமிடத்துத் தமிழ்ப் புலவருடைய தொல்

னுணர்வு புலப்படாமற் போகாது. சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, உதயணன்காதை, திருக்குறள், நாலடியார், திருக்கோவையார், முதலிய பழைய தமிழிலக்கியங்களும் பிற்காலத்துண்டாய கம்பராமாயணம், வில்லிப்புத்தூராழ்வார் பாரதம், நளவெண்பா, நைடதம் முதலிய இலக்கியங்களும் எக்காலத்தும் புலவராற் பொன்னேபோற் போற்றப்படுவன என்பதில் ஐயப்பாடு சிறிதுமின்றன்றோ? கல்விவளஞ் செறிந்திருந்த அந்நாளில், நம் அருமைப் பெரியோர் இயற்றி உதவிய நூல்களைப் போற்றுவிடத்து நம் அருமை பெருமைகளும் குறியின்றி யொழியுமென்பது சொல்ல வேண்டா. அன்றியும், தொன்னூலுணர்ந்த நன்னூலாசிரியர்களாய நம் முன்னோர் செய்யுட்களின் இன்பமே, நம்மை அவரியற்றிய இலக்கியங்களில் அழுந்திப் பயிலுமாறு செய்யுமன்றோ? ஆயினும், அழியாப்பெருமை வாய்ந்த அத்தகைய இலக்கியங்களைக் கல்விப் பொருளில்லாத வறியவர் ஒரு போழ்தும் பயிலார் என்பது உண்மையே. அத்தகையார்க்குப் பொருள் வளஞ் செறிந்தனவும், எளிய நடை வாய்ந்தனவுமாய தோத்திர ரூபமாயுள்ள தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய இலக்கியங்களேனும், விளங்காவோ? அவையும் விளங்காவெனின், அத்தகையார் தமிழரா யென்னே பயனென்க. "திருவாசகத்துக் குருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" எனக்கூறியதே அதன் கற்றற் கெளிமையையும், இன்சொற்களுடைமையையும்,பொருளாழ்த்தியையும், அதன்கண் அமைந்த பக்தி யின்பத்தையும் தெள்ளிதின் விளக்கும். தமிழிலக்கியங்களிற் பெரும்பாலன கடவுட்டன்மை மிகுதியுமுடையன வென்பதும் அறியத்தக்கது: திருக்குறளுக்குச் சங்கப்பலகை சிறி திடங் கொடுத்ததும், நாலடி நானூறு செய்யுட்களும் யாற்றிற்கு எதிரேறி வந்ததும், திருஞான சம்பந்தரது திருவேலை அஃதே போன்று வைகையாற்றிற் கெதிரேறியதும்; கம்ப ராமாயணத்திற் கிசைந்து திருவரங்கப் பெருமான் சிரக்கம்பஞ் செய்ததும், அதன்கண் போந்த 'துமி' என்ற சொல்லை உலக வழக்கெனச் சாதித்ததற்கு நாமகள் இடைப்பெண்ணாயதும், நந்திக் கலம்பகத்தால் அரசன் இறந்ததும், இவைபோல்வன பிறவும், ஈண்டாராயத் தக்கன. தமிழ், தெய்வமொழி யென்பதும் தமிழ்ப்புலவர் கடவுட்டன்மை வாய்ந்தவர் என்பதும் இதனால் நன்கு விளங்குகின்றன. 'தெய்வத் தமிழ்

என்று ஆன்றோர் தமிழைச் சிறப்பித்துள்ளார். இறையனார் அகப் பொருள் என்னும் தெய்வநூலுக்கு நக்கீரர் உரையியற்றிச் சிறந்தா ரென்பது கொண்டு, தமிழ் வாணர் பெருமையையும் ஒருவாற்றான் அறிதல் கூடும். இன்று காறும் நின்று நிலவும் பெருமை நமது தமிழ் இலக்கியங்கட்கே அமைந்துள தெனின், அவற்றின் பெருமை யை எவ்வாறு புகழ்வது? பிறமொழிகளின் கண்ணுள்ள இலக்கியங் களைக்கொண்டு அவ்வம் மொழியாளர் மனவமைதி கொண்டிருக் கத் தமிழ்ப்புலவர் தற்போதைய இலக்கியங்களைக் கொண்டு அமை யாது, மறைந்துபோன தொல்லிலக்கியங்கட்காகக் கதறுவரேல், தமிழ்மொழிக்கண் இயல்பாக எழத்தக்க விருப்பம் புலப்படா தொழியுமோ? (இன்னும் வரும்.)

ராமசுப்பிரமணிய நாவலர்,
"விசாலஹிருதயம்" பத்திராதிபர், பத்மநாபபுரம்.

ஸ்ரீ

சங்ககாலத் தமிழர் சமயநிலை

ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியனார், தென்னிந்தியா வந்தே றிய காலத்திலேயே, பண்டைத் தமிழரது பழக்க வொழுக்கங்கள் பலவும் மாறிப் புதிது வந்த ஆரியரது வைதிக ஆசாரங்கள் தென் னாட்டிலே தலையெடுக்க ஆரம்பித்துவிட்டன. இவையே யன்றி ஒருசில, அவ்வாரிய அறவோர் தமது அறிவுமுதிர்ச்சியால் இடத்திற்குத்தக்க மாற்றவும் பட்டன. பல, புதியன நிறுவவும் பட்டன. இம்மாறுதலுக்குத் தொல்காப்பியனாரே,

"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (பொருள் 145)

எனச் சான்று கூறிப் போனார்.

இவ் வையராம் ஆரியர், தென்னாடு வந்தகாலத்து இவர்க்குள் நிலைத்துவிட்ட ஜாதிப் பிரிவினையும் கூடவந்துவிட்டது என்பதனை இதன் முன் சூத்திரம்,

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமும் உண்டே" (பொருள் 144)

என்றதனாற் காட்டினார். பின் காலத்திலே இம் மேலோர் மூவருள் ளும் பார்ப்பனரே தமது வேள்விநெறிநின்று, அறிவு கொளுத்தி

யும் பிற உபகாரங்கள் செய்தும் மேம்பட்டு, "அந்தணரின் நல்ல பிறப்பில்லை" என்று வியங்கோதும்படிச் சிறந்தனர்.

"ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்
ஈதல் ஏற்றலென் றாறுபுரிந் தொழுகும்
அறம்புரி யந்தணர்", (பதிற்று 24)

அந்நாள் ஊர்தோறும் வந்து குடிபுகலாயினர். பார்ப்பன பிரம்ம சாரிகள், தண்டும் கமண்டுலுவும் கொண்டு, மனைதொறும் பிக்ஷை யேற்று வருவதும், காஷாயந்தரித்த முதுமுனிவர் வனத்திடை பர்ணசாலைகளில் வதிந்து யோகத்திருப்பதும், தினமும் காணக் கூடியதொரு செய்தியா யிருந்தது. இப் பார்ப்பனப் பிரம்மசாரியா ரின் தலைக் குடுமி, தமிழ் மக்களுக்கு பெரிதும் நகைப்பூட்டி நின்றது. தமிழ்ப்பாங்கி யொருத்தி, இதனைக் குதிரைச் சுவலுக்கு ஒப்பிடுகின்றாள்.

" —நம்மூர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமுங்
குடுமித் தலைய மன்ற
நெடுமலை நாட னூர்ந்த மாவே!" (ஐங்குறு 202).

இந் நான்மறை யந்தணர், நாட்டிலே பெருஞ் சிறப்புப் பெற்றிருந் தனர் என்பது, கபிலர் பதிற்றுப்பத்தினுள் (63 இல்) 'பார்ப்பார்க் கல்லது பணி பறி யலையே." எனச் செல்வக் கடுங்கோ வாழிய தனைப் புகழ்ந்தமையினின்று பெறப்படும்.

இவ் விப்பிரர் கூட்டத்துடன், இவரது நால்வேதமும்,பிறசாத் திரங்களும், வேள்விச் சடங்குகளும், நூல்களும் வந்தன. வேதம் அநாதியாயினமையும், அதன் சாசுவத மாறுதலடையாத திரி படையாத தன்மையும்,

" நால் வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங்கணுறை
நெய்மலிஆவுதிப் பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன்களம் பலகொல்?" (புறம், 15.)

"நால் வேத நிலை திரியினும்
திரியாச் சுற்றம்" " (புறம், 2.)

என்பனவாதியவற்றால் அறியலாகும். அன்றியும், வேள்விகள் மிக மிக வாற்றிப் பெரும்பேறு பெற்றனொரு மன்னன் 'பல்யாக

சாலை முதுகுடுமி' என்றழைக்கப் படுகின்றான். பாலைக் கௌதமனார் பெருவேள்வி வேட்டுச் சுவர்க்கம் புக உதவிய பல்யானைச் செல் கெழுகுட்டுவன் சரிதையும் நாமறிந்ததே. மேலும் இவ் வைதிகர் பலர் கூடித் திண்ணையிலுட்கார்ந்து சேர்ந்து சந்தை சொல்லும் போது, தமிழர்க்கு ஆச்சரியகரமாக இது தோற்றிய வண்ணத்தைப் பரிபாடற் கவி விளக்குகிறார்.

''ஏ எ இனக் கிளத்தலின் இணையைநற் கறிந்தனம்':
(பரிபாடல், 3.62.)

இதற்கு உரைகண்ட வைதிகர் சிகாமணி பரிமேலழகர், "நின்னைச் சாம வேதம் இத்தன்மையை எனச் சொல்லுதலின், இத்தன்மையை விளங்க வறிந்தனம். உபசார வழக்கால், ஏஎ என்னுமிசையுடையதனை "ஏஎ" என்றார்" எனக் கூறிப் போகின்றனர். பாடின புலவரும், உரையாசிரியரும் இதன் பொருள் இன்னதென விளக்கமாக அறிந்திருப்பினும், பாமரரும் கூடிய தமிழ்ச் சமூகத்தவர் தாம் கூறியது சாமவேதமென அறிவதற்காக வேண்டி அவர் தினப்படி அறிந்திருக்கக் கூடிய "ஏஎ"ப் பாட்டு என்று அதனை விவகரித்தல் நோக்கற் பாலது.

இவ் வேதங்களுடன், வேதாந்த, சாங்கிய, மீமாஞ்சை முதலிய தர்சன நூல்களும், ஸ்மிருதிநூற் கொள்கைகளும் உடன் வந்து தமிழ் நாட்டிலே பரவலாயின. தவத்தின் மேன்மையைப் பற்றியும், யோக சித்திகளைப்பற்றியும் இவர்க்குக் கேள்வி ஏற்பட்டது பாபம் புண்ணியம் என்ற தெளிவும் நன்றாக நிலைபெற்றன. சமயக் கொள்கைகளிலே சமதரிசனம் வேண்டுமென்ற புத்தியும் ஏற்பட்டு விட்டது.

மாங்குடி மருதனார், பெரிய வேதாந்தக் கருத்துகளை யெல்லாம் 'தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு, மதுரைக்காஞ்சியுள் ஒரிரு அடிகளினுள்ளே, மிக ஒழுங்காக,

"நின்னொடு முன்னிலை யெவனோ?
கொன்னொன்று கிளக்குவன். அடுபோ ரண்ணல்!
கேட்டிசின் வாழி. கெடுக நின் னவலம்"

என எடுத்துரைக்கிறார்.

இவ்வடிகட்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர், "நின்னொடு முன்னிலை யெவனோ?=ஐம்பொறிகளுக்கும் நுகரப்படுவனவாய் முன்னிற்கப்படுவனவாகிய இந்நுகர் பொருள்கட்கு நின்னொடு

என்ன உறவுண்டு? [நின்னென்றது சீவான்மாவை.] கெடுகநின் அவலம்=நின்னிடத்துண்டாகிய மாயை இனிக் கெடுவதாக. அடு போரண்ணல்=அம்மாயையைக் கொல்கின்ற போர்த்தொழில் வல்ல தலைவனே! கொன்னொன்று கிளக்குவல்=பெரிதாயிருப்பதொரு பொருளை நான் கூறுவேன். [அஃது என்னாற் காட்டுதற் கரிது; என்றது கந்தழியினை.] கேட்டிசின் வாழி=அதனைத் தொல்லாணை நல்லாசிரியரிடத்தே கேட்பாயாக." என்று பொருள் விரிக்கிறார்.

பிரபஞ்சமாயையின் ஆவரண சக்தியும், அவ்வாவரணத்தைப் பரமஞானத் தாற்சேதித்து வீடுபெறும் மார்க்கமும், தெய்வ வுண்மையும் இங்கு நன்கு கூறப்பட்டதன்றோ?

பரிபாடற் கவிகளுள் சிலர், சாங்கிய நூல் தத்துவங்களையும், சிலர் மீமாஞ்சா வுண்மைகளையும் எடுத்தாள்கின்றனர். பரிபாடல் மூன்றுவதுபாட்டிலேவரும் "பாழ்" என்ற பதத்திற்குப் "புருடன்" எனப்பொருள் கூறுவர் பரிமேலழகர். "சாங்கியர் பிறிதொன்று பிறத்தற் கிடனகாதென்ப வாகலான், அவர் மதம் பற்றிப் புருடனைப் பாழென்றூர், ஈண்டுத் தத்துவங் கூறுகின்றமையின்" என்று அவர் விளக்குவர். இங்ஙனமே,

"கேள்வியுட் சிறந்த வாசா னுரையும்" (பரிபா-261), என்றவிடத்து, இவ்வாசிரியர், "உத்தேசத் தியாக'மென்ப. அச் சொல்லே கடவுட்கு உருவென்பது சயமினியாற் செய்யப்பட்ட வைதிக நூற்றுணிபாகலின்." எனக் கூறிச் செல்வர்.

இவ்வண்ணமே யோகநூற் றத்துவங்கள் பயின்று,

"நீடிய சடையோ டாடா மேனிக்
குன்றுறை தவசியர்——" (நற்-141)

ஆக நின்றொழுகி முன்னர்

"அடங்கருந் தோற்றத் தருந்தவ முயன்றோர்தம்
உடம்பொழித் துயருல கினிதுபெற் றுங்கே" (கலித்-138)

தமிழரும் ஒரு சிலர் தவ மேம்பட்டன ரெனவும் அறிகிறோம்.

(தொடரும்)

ரா. வாசுதேவ சர்மா, M.A. B.L.,
Lecturer in Sanskrit, The National College, Trichinopoly.

சில குறுந்தொகைப் பாக்கள்.

(ஆங்கில மொழிபெயர்ப்புடன்)

The Love-Songs of the Tamils.

இறையனார் பாடியது.

[இது தலைமகன் தனது அன்புதோன்ற நலன் பாராட்டியது]

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ.
பயிலியது கெழீஇய நட்பின், மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே!

[The lover praises the curls of his beloved:]

Beauty-draped Honey-bee that feed'st on flowers!
Tell not for my pleasure; But tell me true
Is there a flower thou knowest more fragrant
Than the tresses of my love of close-set teeth
So ravishing, beauteous as the dancing peacock ?

2

தேவகுலத்தார்.

[இது தலைமகள் இயற்பட மொழிந்தது]

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று.
நீரினும் ஆரள வின்றே. சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கு நாடனொடு நட்பே!

[The fair one reveals to her maid the magnitude of her love.]

Vaster than the earth, further than heavens
Deeper than the unfathomed deep is my love
Towards that Lord of Hills where the busy bee
Distils honey from flowers of strong-boughed *Kurinji*.

3

காமஞ்சேர் குளத்தார்.

[தலைமகன் பிரிந்தவிடத்துத் தலைமகள், "நம் காதலர் விருப்பில ராதலைக்குறித்து வருந்தும் எனது நெஞ்சம்" எனத் தனது ஆற்றாமை தோன்றக் கூறு நிற்றல்.]

நோம்என் நெஞ்சே! நோம்என் நெஞ்சே!
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநம் காதலர்
அமைவில ராகுதல் நோம்என் நெஞ்சே!

[The fair one at her lover's inconstancy.]

My heart doth grieve! My heart doth grieve!
To think my lord doth inconstant yet remain
Leaving me to my constant tears, which clinging
Scald my eyelids! Oh! how my heart doth grieve!

4

நரிவெருஉத் தலையார்.

[கிழத்தி தோழிக்குத் தனது ஆற்றுமை யறியக் கூறுகிற்றல்]

அதுகொல் தோழி காம நோயே
வதிகுரு குறங்கு மின்னிலைப் புன்னை
யுடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லிதழ் உண்கண் பாடொல் லாவே!

[The lady to her maid.]

Is that my maid! the disease of love,
To think of my Lord of the low-sounding beach
Where the unkindly waters break to buds
Dashing the *Punnai* with its stock of storks
My flowery eyelids refuse all rest?

ரா. வாசுதேவ சர்மா MA., B.L.,
Lecturer in Sanskrit, National College, Trichy.

ஹிதாயதுல் இஸ்லாம்.

வாரம் 1000 பிரதிகள் வெளியாகின்றன.

இப்பத்திரிகை மார்க்க விஷயங்களையும், வியாபார விஷயங்களையும், இராஜாங்கச் சட்டங்களையும், ஜாதி ஒற்றுமையையும் விவரித்து, ஜாதிமத வித்தியாசமில்லாமல் எடுத்துப்பேசுகிறபடியால் ஒவ்வொருவருக்கும் அவசியம் தேவையானது. ஒவ்வொரு தனவந்தர்களுடைய வீட்டிலும்போய் உலாவுகிறபடியால் வியாபாரிகளுக்கு அவசியமானது.

வருஷச் சந்தா ரு. 6—0—0. மலாய்நாடுகள் ரு. 7—0—0.

விலாசம்:—

மானேஜர், 'ஹிதாயதுல் இஸ்லாம்'
571—3-ம் மாதானை, கொழும்பு (சிலோன்)

மதிப்புரை.

வைதேகி.

இப்பெயர் வாய்ந்த (நாவல்) நவீனகத்தின்பாகங்கள் இரண்டினையும் பார்வையிட்டோம். இவற்றை இயற்றிய ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகியம்மாள் இவற்றை இனிய எளியநடையில்தெளிவாய் எழுதியமை குறித்து மகிழ்கின்றோம். எத்தகைய இடர்ப்பாடுகள் உற்றும் மகளிர் தம் கற்புநிலையிற் சிறிதும் கலங்காது திண்ணியோராய் நிற்றல் பெரிதும் வற்புறுத்தப்பெற்றமை இந்நூலின் மேம்பாட்டுக்கு ஒரு சிரியசான்றும். நாவல் துப்பறியும்திறனும் அழகும் அமைந்துள்ளது. இடையிடையே கவிச்சக்ரவர்த்தியாராகிய கம்பர் முதலியோர் பொருள்பொதிந்த அருங்கவிகள் ஏற்ற பெற்றி மேற்கோளாக அமைக்கப்பெற்றுள்ளன. அவை நீதிகளைப் படிப்போர் உள்ளத்தில் அழுந்தப் பதிப்பனவாயுள்ளன. தீவினைநயந்து செய்யும் தீயர்கள் தீப்பயனைத் தவறாது அடைதல் நன்கு விளக்கப்பட்டுள்ளது. பொதுவாக மகளிர் கல்விப்பயனால் எய்தும் கற்பொழுக்கமாண்புகள் இதில் செவ்விதின் அமைந்துள்ளமை காணக் கற்போர் யாவரும் பெரிதும் மகிழ்வர். கதைப்போக்கும் மனதிற்குச் சலிப்பினைத் தராமல், மனவெழுச்சியைத் தருவது, இதன் மற்றொரு சிறப்பாகும். இத்தகைய நவீனகங்களே படிப்போர்க்கு நற்பயனுறுவிப்பன என்பது எம் அபிப்பிராயம். பாகங்கள் இரண்டும் 550 பக்கங்கள் கொண்டுள்ளன. ஒவ்வொருபாகமும் தனித்தனி ரூ. 1–4–0 விலையுள்ளது. வேண்டுவோர், "ஜெகன்மோகினி ஆபீஸ், 26. தோடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை" என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறலாகும். —பத்திராதிபர்.

ரூ. 150 முதல் 500 வரை மாதம் சம்பாதிக்கலாம்!

எந்த வேலை செய்வது? எவ்விதமாக சம்பாதிப்பது? என்பதாக இனி கவலைவேண்டாம்! ஒழிந்த நேரங்களில் வேலை செய்து நாள் 1-க்கு குறைந்தது ரூ. 3 முதல் 15 வரை சம்பாதிப்பதற்குத் தகுந்த அனுபவ கைத்தொழில் முறைகளையும், புதிது புதிதான யோஜனைகளையும் மாதந்தோறும் போதித்துவரும் 'தொழிலாசிரியன்" என்னும் மாதாந்தத் தமிழ் சஞ்சிகைக்கு இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்! இதன் வருட சந்தா ரூ. 2—0—0 தான்.

மானேஜர்:—"தொழிலாசிரியன்" ஆபீஸ்.
சிவகெங்கை. S. I.